بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحْمَدُهٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰی عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

இதழ் 43 & 44

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - 30 ரபீயுல்அவ்வல் - 07 ரபீயுஸ்ஸானீ

ஹிஜ்ரி ஷம்ஸி 1401 - 27 அகா - 03 நுபுவ்வத் ★ 27 அக்டோபர் - 03 நவம்பர் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

فَلَمَّا نَسُوۡا مَا ذُکِّرُوۡا بِہٖۤ اَنۡجَیۡنَا الَّذِیۡنَ یَنۡہَوۡنَ عَنِ السُّوۡٓءِ وَاَخَذۡنَا الَّذِیۡنَ ظَلَمُوۡا بِعَذَابٍۭ بَئِیۡسٍۭ بِمَا کَانُوۡا یَفۡسُقُوۡنَ

**பொருள் :**
அவர்களுக்குக் கூறப்பட்ட அறிவுரையை அவர்கள் மறந்துவிட்டபோது, தீமையைத் தடுத்துக் கொண்டிருந்தவர்களை நாம் காப்பாற்றினோம். அநீதி இழைத்துக் கொண்டிருந்தவர்களை மிகக் கடினமான தண்டனைக்கு ஆளாக்கினோம். ஏனெனில், அவர்கள் தீய செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள்.

(அல்அஃராஃப்:166)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அல்லாஹ் எனது நஃப்ஸை எந்த அளவிற்கு முஸ்லிமாக ஆக்கியுள்ளான் என்றால், ஒரு நபர் என் முன் அமர்ந்து வருடம் முழுவதும் என்னை மிகவும் மோசமாக ஏசிபேசிக் கொண்டிருந்தால் இறுதியில் அவரே வெட்கத்திற்குள்ளாவார்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் எனது நஃப்ஸை எந்த அளவிற்கு கட்டுப்பாட்டில் வைத்துள்ளேன் என்றால், மேலும், அல்லாஹ் எனது நஃப்ஸை எந்த அளவிற்கு முஸ்லிமாக ஆக்கியுள்ளான் என்றால், ஒரு நபர் என் முன் அமர்ந்து வருடம் முழுவதும் என்னை மிகவும் மோசமாக ஏசிபேசிக் கொண்டிருந்தால் இறுதியில் அவரே வெட்கத்திற்குள்ளாவார். மேலும், எனது பாதங்களை இருந்த இடத்திலிருந்து அசைக்க முடியவில்லை என்பதை அவருக்கு ஒப்புக் கொள்ள நேரிடும்.

மக்கள் கொடுத்த துன்பங்கள் மற்றும் தீமைகளைக் கண்டு அன்னார் ஒருபோதும் பயந்துவிடவில்லை. இது தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

வானத்தில் முதலில் தீர்மானிக்கப்படாத வரை எந்தவொரு விவகாரமும் பூமியில் நிகழ்வது கிடையாது. இறைவனின் நாட்டமின்றி எந்த ஒன்றும் நடக்க முடியாது. மேலும் அவன் தனது அடியாரை இழிவடையச் செய்யவும் மாட்டான், வீணாக்கவும் மாட்டான்.

ஜலந்தர் என்ற இடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்:

சோதனையின் நேரத்தில் எனது ஜமாஅத்தின் சில பலவீனமான உள்ளங்களைக் குறித்து எமக்கு அச்சம் ஏற்படுகிறது. எனது நிலை என்னவென்றால், உமது எந்த தேவையையும் நாம் பூர்த்தி செய்ய மாட்டோம் என்று எனக்கு தெளிவாக குரல் வந்தாலும், நான் சத்தியம் செய்கிறேன். அந்த (இறைவனின்) இருப்பின் மீதான அந்த அன்பிலும் இறைநேசத்திலும், மார்க்கத் தொண்டிலும் எந்த குறைவும் ஏற்படாது. எனவே நான் அதை ஏற்கனவே பார்த்து விட்டேன். பின்னர் அன்னார் (ரலி) இதனை ஓதினார்கள்.

هَلۡ تَعۡلَمُ لَہٗ سَمِیًّا (மர்யம் : 66)

அன்னார் (அலை) தமது தொண்டரான ஹாமித் அலி அவர்களிடம் தமது தபாலை தபால் நிலையத்தில் அனுப்புவதற்கு கொடுத்தார்கள். அவரிடமிருந்து அந்த தபால் எங்கோ தொலைந்துவிட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு, குப்பைத் தொட்டியிலிருந்து அது கிடைத்த பிறகு, அன்னார் (அலை) அவர்கள் ஹாமித் அலி சாஹிப் அவர்களை அழைத்து அவரிடம் கடிதத்தை காண்பித்துவிட்டு, ஹாமித் அலி! உமக்கு மறதி அதிகமாகிவிட்டது. கவனத்துடன் பணி செய்யுங்கள் என்று மட்டுமே அவரிடம் மென்மையுடன் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 411, காதியான் பதிப்பு 2018)

## நபிமொழி

**ஆடு மேய்க்காத எந்த நபியும் இல்லை என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

(2262) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆடு மேய்க்காத எந்த ஒரு நபியையும் அல்லாஹ் அனுப்பவில்லை. (அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களும் (ஆடு மேய்த்தீர்களா)? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு, ஆம்! சில திர்ஹம்களுக்கு பகரமாக மக்கா வாசிகளின் ஆடுகளை நான் மேய்த்துள்ளேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, காதியான் பதிப்பு 2008)

* * * * *

**ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் மகத்துவ மிக்க பண்புகளுக்கும், எண்ணற்ற சிறப்புகளுக்கும் சொந்தக் காரராக இருந்தார்கள். இவ்வளவு சிறப்புகளுக்குப் பிறகும் அன்னார் (அலை) இறையடியாராகவே இருந்தார்கள். தமது நஃப்ஸின் சிறப்புகளை ஒருபோதும் தமக்கானதாக சுட்டிக்காட்டி ஷிர்க் செய்யவில்லை.**

اِنَّ اِبۡرٰہِیۡمَ کَانَ اُمَّۃً قَانِتًا لِّلّٰہِ حَنِیۡفًا ؕ وَلَمۡ یَکُ مِنَ الۡمُشۡرِکِیۡنَ

பொருள்: நிச்சயமாக, இப்ராஹீம் (தங்களிலே) ஒரு சமுதாயமாகவும், அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டவராகவும், எப்போதும் (அவன்பால்) சாய்ந்தவராகவும் இருந்தார். அவர் இணை வைப்பாளர்களைச் சார்ந்தவராயிருந்ததில்லை. (அந் நஹ்ல்:121)

இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை உம்மத் (சமுதாயம்) என்று கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் இவ்வாறாகும். அதாவது, அவர் நன்மைக்கான போதனை நல்கக் கூடியவராக இருந்தார். மேலும், எல்லா வகையான நன்மைகளும் அவரிடம் ஒன்றுகூடியிருந்தன. என்னைப் பொருத்தவரை இங்கும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. اِجْتَبَاهُ - அதாவது அவரிடம் எத்தகைய ஆற்றல்கள் உள்ளன என்றால் அதன் மூலம் சமுதாயங்கள் தோன்றும். எந்த அளவுக்கு என்றால் அந்த ஆற்றல்களின் காரணமாக அவரை சமுதாயம் எனக் கூற முடியும்.

இந்த வசனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் ஏராளமான பண்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று, அன்னார் நன்மையை போதிப்பவராக இருந்தார்கள். உலகத்திற்கு நன்மைக்கான போதனையை வழங்கி வந்தார்கள். இரண்டாவதாக, அன்னாரிடம் நன்மைகள் ஒன்றுசேர்க்கப்பட்டிருந்தன. எல்லா வகையான நல்லொழுக்கங்களும் அன்னாரிடம் காணப்பட்டன. மூன்றாவதாக, அன்னார் மிகவும் உயர்தரமான இயல்பை பெற்றிருந்தார்கள். அது மிக வலிமையான முன்மாதிரிகளின் ஆற்றல்களை மறைவாகக் கொண்டிருந்தது. அவற்றிலிருந்து சமுதாயங்கள் தோன்றுவது சாத்தியமானதாக இருந்தது. நான்காவதாக, போதுமென்ற மனமுடையவராக இருந்தார்கள். அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டவராக இருந்தார்கள். துஆக்கள் செய்யக் கூடியவராக இருந்தார்கள்.............

இவ்வளவு சிறப்புகளுக்கு பிறகும், அன்னார் இறையடியாராகவே இருந்தார்கள். தமது நஃப்ஸின் சிறப்புகளை ஒருபோதும் தமக்கே உரியதாக சுட்டிக் காட்டி ஷிர்க்கில் ஈடுபட்டதில்லை.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 268, காதியான் பதிப்பு 2010)

* * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய நற்பண்புகளைப் பற்றிய குறிப்புகள்**

**ஒரு முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை நோக்கி உரையாற்றியவாறு கூறினார்கள்:**

**நான் உங்களுக்கு ஏராளமான கட்டளைகளை வழங்கினேன். ஆனால், உங்களில் மிகவும் தூய நபர்களிடத்திலும் சில முறை நான் எதிரிப்பின் ஆன்மாவைக் கண்டேன். ஆயினும், நான் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஒருபோதும் இந்த ஆன்மாவைக் கண்டதில்லை.**

**மதிப்பிற்குரிய ஸமீயுல்லாஹ் ஸியால் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய சித்தீக்கா பேகம் சாஹிபா ஆகியோரின் நற்குறிப்புகளும், ஜனாஸா காயிப் தொழுகையும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 செப்டம்பர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு தபூக் மாதம் **23ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இன்றும் அந்தத் தொடர் தொடரும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

اَلَّذِيْنَ اسْتَجَابُوْا لِلّٰهِ وَ الرَّسُوْلِ مِنْ بَعْدِ مَآ
اَصَابَهُمُ الْقَرْحُ لِلَّذِيْنَ اَحْسَنُوْا مِنْهُمْ وَاتَّقَوْا اَجْرٌ عَظِيْمٌ

பொருள்: தங்களுக்கு காயம் ஏற்பட்டதன் பிறகு(ம்) அல்லாஹ்வினுடையதும், தூதருடையதுமான கட்டளையினை ஏற்றுக் கொண்டவர்களுள், தங்கள் கடமையினை நன்முறையில் நிறைவேற்றியவர்க்கும், இறையச்சத்தை மேற்கொண்டவர்களுக்கும் பெரும் கூலி உண்டு (ஆலிஇம்ரான்:173) என்ற வசனம் தொடர்பாக அன்னார் (ரலி) உர்வா அவர்களிடம் கூறினார்கள்: எனது சகோதரியின் மகனே! உம்முடைய தந்தை ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோர் இந்த மக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு உஹது போர் நாளன்று துன்பம் ஏற்பட்டது. இணைவைப்பாளர்கள் திரும்பி சென்றுவிட்டனர். எதிரிகள் திரும்பி வருவார்கள் என்ற ஐயம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்டது. அப்போது அவர்களைப் பின்தொடர்ந்து யார் செல்வார்? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். எனவே, (ஸஹாபிகளாகிய) அவர்களில் 70 நபர்கள் தங்களது பெயர்களைக் கொடுத்தனர்.

அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களும் அடங்குவர் என்று உர்வா கூறிவந்தார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி, அறிவிப்பு எண்: 4077)

அபூஸுஃப்யான் உஹது போர் முடிவடைந்த நேரத்தில் பள்ளத்தாக்கில் இருந்தான். அடுத்த வருடம் இதே நாட்களில் பத்ருடைய இடத்தில் மீண்டும் போருக்கான வாக்குறுதி அளிக்கிறோம் என்று அவன் கூறினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அப்போது, அபூஸுஃப்யான் தனது படையினரை அழைத்துக் கொண்டு விரைவாக மக்காவை நோக்கி புறப்பட்டு விட்டான்.

அதன் பிறகு நடந்த சம்பவங்களை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூடுதல் தற்காப்பு எண்ணத்துடன் 70 நபர்களைக் கொண்ட ஒரு குழுவை தயார் செய்து குரைஷிய படையை பின் தொடர்ந்து செல்ல உடனடியாக அனுப்பி வைத்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரும் அதில் இருந்தனர். இது புகாரியின் அறிவிப்பாகும். பொதுவான வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறே அறிவிக்கின்றனர். அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அல்லது சில அறிவிப்புகளின் அடிப்படையில் ஹஸ்ரத் ஸஅத் பின் அபீவகாஸ் (ரலி) அவர்களை, குரைஷியர்களை பின் தொடர்ந்து செல்ல அனுப்பி வைத்தார்கள். மேலும், குரைஷியப் படை மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்கு எண்ணம் கொண்டுள்ளதா? என்பதை அறிந்து வரும்படி அவர்களிடம் கூறினார்கள். மேலும் கூறினார்கள்: குரைஷியர்கள் ஒட்டகங்கள் மீது சவாரி செய்துள்ளனர். மேலும் குதிரைகளில் சவாரி செய்யவில்லையென்றால் அவர்கள் மக்காவை நோக்கிச் செல்கின்றனர். மேலும் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க அவர்கள் எண்ணம் கொள்ளவில்லை என்று புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை அவர்கள் குதிரையின் மீது சவாரி செய்துள்ளனர் என்றால் அவர்களின் எண்ணம் நல்லதல்ல என்று புரிந்து கொள்ளுங்கள்.

மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களிடம் இந்த விஷயத்தை வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்:

அதாவது, குரைஷியர்களின் படை மதீனாவை நோக்கி வந்தால் பின்னர் உடனடியாக அது குறித்த தகவலை எனக்கு அளிக்க வேண்டும்.

அன்னார் (ஸல்) மிகவும் உணர்வுப்பூர்வமான நிலையில் கூறினார்கள்:

ஒருவேளை குரைஷியர்கள் தற்போது மதீனாவின் மீது தாக்குதல் நடத்தினால், நாம் அவர்களுடன் போரிட்டு அந்த தாக்குதலுக்குரிய விலையை அவர்களை சுவைக்கச் செய்வோம்.

எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் அனுப்பப்பட்ட நபர் அன்னார் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களின் கீழ் சென்றார்கள். மேலும், குரைஷியப் படை மக்காவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்ற செய்தியை எடுத்துக் கொண்டு விரைவாக திரும்பி வந்துவிட்டார்கள்.

(நூல்: சீரத் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) பக்கம் 499-500)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எங்களுடன் உம்மே அய்மனிடம் வாருங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு அன்னாரை சந்திப்பதற்காக சென்று வந்தார்களோ நாமும் சென்று வருவோம்.

அதற்கு, அன்னார் அதாவது, ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் அன்னாரை சென்றடைந்தபோது, அவர்கள் அழத்

தொடங்கிவிட்டார்கள். தாங்கள் (ரலி) ஏன் அழுகின்றீர்கள்? என்று அவர்கள் இருவரும் கேட்டனர். அல்லாஹ்விடம் உள்ளவையெல்லாம் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு மிகச் சிறந்தவையாகும் என்று அவர்கள் இருவரும் கூறினர். அல்லாஹ்விடம் உள்ளவையெல்லாம் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்கு சிறந்தவையாகும் என்பதை நானும் அறிவேன். ஆனால், தற்போது வஹீ விண்ணிலிருந்து இறங்குவது நின்று விட்டதே என்பதற்காக நான் அழுகின்றேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

உம்மே அய்மன் அவர்கள் இருவரையும் அழ வைத்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் அன்னாருடன் அழுதார்கள் என்று ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (சுனன் இப்னு மாஜா, பாடம் அல்-ஜனாயிஸ், ஹதீஸ் எண்: 1635)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மக்களே! அல்லாஹ் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளான். நீர் பொய்யர் என்று நீங்கள் கூறிவிட்டீர்கள். (நான்) உண்மையாளர் என்று அபூபக்ர் (ரலி) கூறினார். அவர் தனது உயிராலும், செல்வத்தாலும் என்னிடம் அனுதாபத்தை வெளிப்படுத்தினார்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஃபளாயில், அஸ்ஹாபுன் நபி(ஸல்), பாடம் கவ்லுன் நபி(ஸல்), ஹதீஸ் எண்:3661)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த விஷயம் தொடர்பாக கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து மட்டுமே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதாவது, உங்களில் ஒவ்வொருவரும் என்னை நிராகரித்தார். ஆனால், நான் அபூபக்ரிடம் எந்த கோணல் தன்மையையும் காணவில்லை. (குத்பாதே மஹ்மூத்-தொகுதி 26, பக்கம் 277-278)

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தின்போது, ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) மற்றும் மக்கத்து குரைஷியர்களுக்கிடையில் சமாதான உடன்படிக்கை நடந்து கொண்டிருந்தபோது, அபூ ஜந்தலை உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு ஏற்ப திருப்பி அனுப்பி வைத்துவிட்டார்கள். அந்தநேரத்தில் ஸஹாபிகள் மிகவும் உணர்ச்சிபூர்வமான நிலையில் இருந்தனர்.

இதைக் குறிப்பிட்டவாறு, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்:

முஸ்லிம்கள் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். மேலும், மார்க்க தன்மானத்தின் காரணமாக அவர்களின் கண்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஆயினும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அதை அடக்கிக் கொண்டு மிகவும் மௌனமாக இருந்தார்கள். இறுதியில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் (அமைதியாக) இருக்க முடியவில்லை. அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றார்கள். நடுங்கிய குரலில், தாங்கள் இறைவனின் உண்மையான தூதர் இல்லையா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆம்! நிச்சயமாக என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நாம் உண்மையில் இல்லையா? நமது எதிரிகள் பொய்யில் இல்லையா? என்று உமர் (ரலி) கேட்டார்கள். அதற்கு, ஆம், நிச்சயமாக அப்படித்தான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால், நாம் நமது உண்மையான மார்க்கத்தின் விவகாரத்தில் இந்த இழிவை ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்? என்று உமர் (ரலி) கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நிலையைக் கண்டு சுருக்கமான சொற்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

பாருங்கள், உமர்! நான் இறைவனின் தூதர் ஆவேன். மேலும், நான் இறைவனின் விருப்பத்தை அறிகின்றேன். மேலும், அதற்கெதிராக என்னால் நடக்க முடியாது. அவனே எனது உதவியாளன் ஆவான்.

ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் வேகம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே சென்றது. நாம் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வோம் என்று தாங்கள் (ஸல்) எங்களிடம் கூறவில்லையா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, ஆம், நான் நிச்சயமாக கூறியிருந்தேன். ஆயினும், நாம் நிச்சயம் இந்த வருடமே தவாஃப் செய்வோம் என்று நான் கூறினேனா? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இல்லை, தாங்கள் அவ்வாறு கூறவில்லை என்று உமர் (ரலி) கூறினார்கள். அப்படியென்றால், நீங்கள் காத்திருங்கள். நிச்சயமாக, நீங்கள் மக்காவில் நுழைவீர்கள். இன்ஷா அல்லாஹ். மேலும், கஃபாவை தவாஃப் செய்வீர்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆயினும், அந்த உணர்வுப்பூர்வமான நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கவில்லை. எனினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது சிறப்பான மதிப்பச்சம் இருந்தது. எனவே, ஹஸ்ரத் உமர் (ரலி) அங்கிருந்து விலகி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அன்னாரிடமும் இதேபோன்ற விஷயங்களை உணர்ச்சிவயத்தில் பேசினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) வழங்கிய பதிலைப் போன்ற பதிலையே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் வழங்கினார்கள். ஆனால், அத்துடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவுரையின் வடிவில், பாரும்! உமர்! உம்மை கட்டுப்பாட்டில் வையும். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தோள்களில் நீர் கரம் வைத்துள்ளீர். அதனை இலகுவாக்கிக் கொள்ளாதீர். ஏனெனில், இறைவன் மீது ஆணையாக! இவர், அதாவது நாம் எந்த நபரிடம் நமது கரத்தை ஒப்படைத்துள்ளோமோ அவர் எல்லா நிலையிலும் உண்மையாளர் ஆவார்.

ஹஸ்ரத் உமர் (ரலி)அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் அந்தநேரத்தில், உணர்ச்சியில் எல்லா விஷயங்களையும் கூறிவிட்டேன். ஆயினும், பிற்காலத்தில் எனக்கு மிகவும் வெட்க உணர்வு ஏற்பட்டது. நான் தவ்பா செய்யும் விதமாக அந்த பலவீனத்தை கழுவுவதற்காக நிறைய நஃபிலான அமல்களை செய்தேன். அதாவது, எனது அந்த பலவீனத்தின் கறை நீங்கி விடுவதற்காக நான் தான தருமங்கள் வழங்கினேன். நோன்புகள் நோற்றேன். நஃபில் தொழுகைகளை தொழுதேன். மேலும் அடிமைகளை விடுதலை செய்தேன். (நூல்: ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 767-768)

இந்த சம்பவத்தைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை நோக்கி உரையாற்றியவாறு கூறினார்கள்:

நான் உங்களுக்கு ஏராளமான கட்டளைகளை வழங்கினேன். ஆனால், உங்களில் மிகவும் தூய நபர்களிடத்திலும் சில முறை நான் எதிரிப்பின் ஆன்மாவைக் கண்டேன். ஆயினும், நான் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஒருபோதும் இந்த ஆன்மாவைக் கண்டதில்லை.

எனவே, ஹுதைபிய்யா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின் போது ஹஸ்ரத் உமர் (ரலி) போன்ற நபரும் கூட பதற்றமடைந்துவிட்டார். மேலும், அதே பதற்றத்தின் நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் அன்னார் (ரலி) சென்றார்கள். நாம் உம்ரா செய்வோம் என்ற இறைவனின் வாக்குறுதி நம்முடன் இல்லையா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, ஆம் இறைவனின் வாக்குறுதி இருந்தது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். இறைவன் நமக்கு உதவியும், ஒத்தாசையும் செய்வான் என்ற அவனது வாக்குறுதி நம்முடன் இருக்கவில்லையா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஆம்! இருந்தது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் நாம் உம்ரா செய்தோமா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், உமரே! நாம் இந்த வருடமே உம்ரா செய்வோம் என்று இறைவன் எப்போது கூறினான்? என்று கேட்டார்கள். அடுத்து,

நமக்கு வெற்றியும், உதவியும் கிடைத்ததா? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு, இறைவனும், அவனது தூதரும் வெற்றி மற்றும் உதவியின் பொருளை நம்மைவிட நன்றாக அறிவர் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆனால், இந்த பதிலால் உமர் (ரலி) அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கவில்லை. அன்னார் (ரலி) அவர்கள் அதே பதற்றத்தின் நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றடைந்தார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் மக்காவில் தவாஃப் செய்தவாறு நுழைவோம் என்ற இறை வாக்குறுதி நம்முடன் இருந்ததல்லவா? எனக் கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

நாம் இறைவனின் கூட்டத்தினர் இல்லையா? வெற்றி மற்றும் உதவிக்கான இறைவாக்குறுதி நம்முடன் இருக்கவில்லையா? என்றும் அன்னார் (ரலி) கேட்டார்கள். ஆம்! என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் உம்ரா செய்தோமா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

நாம் இந்த வருடமே உம்ரா செய்வோம் என்று இறைவன் எப்போது கூறியிருந்தான்? இந்த வருடம் உம்ரா நடக்கும் என்பது எனது எண்ணமாகவே இருந்தது. இறைவன் ஒரு காலத்தை குறிப்பிட்டு கூறியிருக்கவில்லையே! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆக, ஒரு வகையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழங்கியிருந்த அதே பதிலையே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கினார்கள். (குத்பாதே மஹ்மூத், தொகுதி 20, பக்கம் 382)

இரண்டு அறிவிப்புகளிலும் இந்த அளவில் மட்டுமே வேறுபாடு உள்ளது. அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள் என்று ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறிய விஷயம் இதுதான். அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். பின்னர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இரு நபர்கள் ஒருவர் மற்றவரை ஏசி பேசினர். ஒருவர் முஸ்லிம்களைச் சார்ந்தவராக இருந்தார். மற்றொருவர் யூதர்களைச் சார்ந்தவராக இருந்தார். முழு உலகிலும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மேன்மையை வழங்கிய அந்த இறைவனின் மீது ஆணையாக! என்று முஸ்லிம் கூறினார். அப்போது, முழு உலகிலும் மூஸா (அலை) அவர்களுக்கு மேன்மை வழங்கிய அந்த இறைவனின் மீது ஆணையாக! என்று அந்த யூதர் கூறினார். அந்நிலையில், முஸ்லிம் தனது கையை ஓங்கினார். மேலும், யூதரை கன்னத்தில் அறைந்துவிட்டார். அந்த யூதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றார். மேலும், தனக்கும் அந்த முஸ்லிமிற்கும் இடையில் நிகழ்ந்த விவகாரத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த முஸ்லிமை அழைத்தார்கள். மேலும், அது தொடர்பாக அவரிடம் விசாரித்தார்கள். அவர் அன்னாரிடம் கூறியபோது, மூஸாவை விட எனக்கு மேன்மை வழங்காதீர்கள் என்று, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரிடம் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் குஸூமாத், ஹதீஸ் எண்:2411)

எந்த முஸ்லிம் அந்த யூதரை கன்னத்தில் அறைந்தாரோ அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்று அந்த ஹதீஸின் விளக்கவுரையில் எழுதப்பட்டுள்ளது. (உம்ததுல் காரி, பாகம் 12, பக்கம் 351, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001) இது புகாரியின் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்நிய மார்க்கத்தைச் சார்ந்தவர்களின் உணர்வுகளை மிக அதிகமாக கருத்தில் கொண்டிருந்தார்கள். ஒரு முறை, எல்லா நபிமார்களின் மீதும் மூஸாவிற்கு மேன்மை வழங்கிய இறைவன் மீது ஆணையாக! என்று ஒரு யூதர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முன்னால் கூறிவிட்டார். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரது கன்னத்தில் அவரை அடித்துவிட்டார்கள்.

இந்த சம்பவத்தைக் குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்ததும், அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்ற மனிதரைக் கூட கண்டித்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

சிந்தித்துப் பாருங்கள். முஸ்லிம்களின் அரசாங்கம் இருக்கிறது. ஒரு யூதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு மேன்மை வழங்குகின்றார். மேலும், அந்த யூதர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் போன்ற மென்மையான உள்ளம் படைத்த மனிதருக்கும் கோபம் வரும் முறையில் பேசுகின்றார். அப்போது, அன்னார் (ரலி) அவர்கள் அவரை கன்னத்தில் அறைந்துவிடுகின்றார்கள். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரைக் கண்டிக்கின்றார்கள். மேலும், நீங்கள் ஏன் அவ்வாறு கூறினீர்கள்? அந்த யூதர் தமது விருப்பப்படி நம்பிக்கை கொள்வதற்கு அவருக்கு உரிமை உள்ளது என்று கூறுகின்றார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 531)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கொண்டிருந்த அன்பு நேசத்தைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் கொண்டிருந்த தொடர்பு அன்பின் தொடர்பாக இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் மதீனாவில் நுழைவதற்காக மக்காவிலிருந்து புறப்பட்டபோது அந்த நேரத்திலும் அன்னார் (ரலி) அவர்களின் தொடர்பு நேசத்தின் தொடர்பாகவே இருந்தது. மேலும், அன்னார் (ஸல்) அவர்களின் மரண நேரம் வந்தபோதும், அன்னார் (ரலி) அவர்களின் தொடர்பும் நேசத்தின் அடிப்படையிலான தொடர்பாக இருந்தது.

إِذَا جَآءَ نَصْرُ اللّٰهِ وَالْفَتْحُ۔
وَرَاَيْتَ النَّاسَ يَدْخُلُوْنَ فِيْ دِيْنِ اللّٰهِ اَفْوَاجًا۔
فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَاسْتَغْفِرْهُ اِنَّهٗ كَانَ تَوَّابًا

என்ற திருக்குர்ஆன் வஹீ இறங்கியது. அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணம் குறித்த செய்தி இருந்தது. அன்னார் (ஸல்) அவர்கள் குத்பா கொடுத்தார்கள். அந்த குத்பாவில் இந்த அதிகாரம் இறங்கியதைக் குறித்து குறிப்பிட்டார்கள். மேலும் கூறினார்கள்:

அல்லாஹ் தனது ஓர் அடியாருக்கு, தமது தோழமை மற்றும் உலகியல் முன்னேற்றங்களில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுப்பதற்கு அனுமதி வழங்கினான். அந்த அடியார் அல்லாஹ்வின் தோழமைக்கு முன்னுரிமை வழங்கினார். இந்த அதிகாரத்தைக் கேட்டுவிட்டு அனைத்து ஸஹாபிகளின் முகங்களும் மகிழ்ச்சியில் பொழிவாக காணப்பட்டது. அனைவரும் அல்லாஹ்வின் மகத்துவத்தை எடுத்துரைக்க துவங்கினர். மேலும், அல்ஹம்துலில்லாஹ்! தற்போது இந்த நாள் வந்துள்ளது என்று கூறினர். ஆனால், மற்ற அனைத்து மக்களும் மகிழ்ச்சியாக இருந்த அந்தநேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தேம்பி தேம்பி அழுதார்கள். மேலும், நிம்மதியிழந்து அழுது கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் மீது எங்களின் தாய், தந்தை, மனைவி, மக்கள் உட்பட அனைவரும் அர்ப்பணம் ஆகட்டுமாக. தங்களுக்காக நாங்கள் எல்லாவற்றையும் தியாகம் செய்ய தயாராக உள்ளோம்.

ஒருவரின் அன்பிற்குரியர்

நோய்வாய்பட்டுவிட்டால் ஆடு பலியிடப்படுகின்றது. அதைப் போன்று ஒருவகையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மற்றும் தமது அனைத்து அன்பர்களின் குர்பானியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக சமர்ப்பித்தார்கள்.

அன்னார் (ரலி) அவர்கள் அழுவதைப் பார்த்துவிட்டு மேலும் இந்த விஷயத்தைக் கேட்டுவிட்டு. இந்த முதியவருக்கு என்ன ஆனது? என்று சில ஸஹாபிகள் கூறினர். அல்லாஹ் தனது அடியார்களில் ஒருவருக்கு அவர் இறைவனின் தோழமையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் அல்லது உலக முன்னேற்றங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற உரிமையை அவருக்கு வழங்கியுள்ளான். இதற்காக இவர் ஏன் அழுகின்றார்? என்றனர். இந்த இடத்தில் இஸ்லாத்தின் வெற்றிகளுக்கான வாக்குறுதி வழங்கப்பட்டு கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மாபெரும் ஸஹாபியும் கூட அதில் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர். மக்கள் இவ்வாறு ஆச்சரியம் அடைவதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நிம்மதியின்மையையும் கண்டார்கள். மேலும், அன்னாரின் ஆறுதலுக்காக கூறினார்கள்:

அபூபக்ர் (ரலி) எனக்கு எவ்வளவு நேசத்திற்குரியவர் என்றால் எனக்கு இறைவனைத் தவிர்த்து வேறு ஒருவரை கலீலாக (நண்பராக) ஆக்கிக் கொள்வது ஆகுமானதாக இருந்திருந்தால் நான் அன்னாரை ஆக்கிக் கொண்டிருப்பேன். பின்னர், தொடர்ந்து கூறினார்கள்: ஆயினும், தற்போது கூட இவர் என்னுடைய நண்பரும், ஸஹாபியும் ஆவார். பின்னர் கூறினார்கள்: நான் கட்டளையிடுகின்றேன். இன்று முதல், அபூபக்ர் (ரலி) அவர்களின் ஜன்னல் கதவைத் தவிர பள்ளிவாசலை நோக்கி திறக்கப்படும் அனைவரின் வீட்டு ஜன்னல்களும் அடைக்கப்பட வேண்டும். இவ்வாறு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நேசத்தை பாராட்டினார்கள். ஏனெனில், அந்த முழுமையான நேசம் தான் அந்த வெற்றி மற்றும் உதவிக்கான செய்திக்குப் பின்னால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரண செய்தி உள்ளது என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அறிவித்து கொடுத்தது. மேலும், நாங்கள் மரணிப்போம். ஆனால், தாங்கள் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்க வேண்டும் என்று தனது மற்றும் தனது அனைத்து அன்பர்களின் உயிரை ஃபித்யாவாக கொடுப்பதற்கு அன்னார் (ரலி) அவர்கள் முன் வந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின்போதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உயர்தரமான முன்மாதிரியை வெளிப்படுத்தினார்கள்.

சுருக்கமாக, தவ்ர் குகையில் தமது உயிருக்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதற்றத்தை வெளிப்படுத்தவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக பதற்றமடைந்தார்கள். எனவே, அல்லாஹ் அன்னாருக்கு குறிப்பாக ஆறுதலை வழங்கினான். (குத்பாதே மஹ்மூத் தொகுதி6, பக்கம் 814-815, அக்டோபர் 18, 1935 அன்று வழங்கப்பட்ட குத்பா)

எல்லா இடத்திலும், எங்கெல்லாம் வெளிப்படுத்தினார்களோ அங்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பின் காரணமாகவே செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹதீஸ்களில் வருகின்றது. ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருக்கிடையில் ஏதோ ஒரு விஷயத்தில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் பெரிதானது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் கடுமை இருந்தது. எனவே தேவையில்லாமல் சண்டை பெரிதாகி விடாமல் இருப்பதற்காக தாம் அந்த இடத்திலிருந்து சென்றுவிடுவதை உகந்ததாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கருதினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (அங்கிருந்து) செல்ல முயன்றார்கள். அப்போது, முன்னால் சென்று, எனது கூற்றுக்கு பதில் கொடுத்துவிட்டு செல்லுங்கள் என ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சட்டையை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிடித்துவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரிடமிருந்து விலகுவதற்கு முற்பட்டபோது, அன்னாரின் சட்டை கிழிந்துவிட்டது. அன்னார் (ரலி) அவர்கள் அங்கிருந்து தமது வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் என்னைப் பற்றி புகார் செய்வதற்கு சென்றுள்ளார்கள் என்ற ஐயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தம்முடைய நியாயத்தையும் எடுத்துரைக்க முடியும் என்று எண்ணி அன்னார் (ரலி) அவர்களும் பின்னாலேயே சென்றார்கள். ஆனால், வழிப்பாதையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பார்வையில் தென்படவில்லை. அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் புகார் செய்வதற்காக சென்றுள்ளார்கள் என்றே அன்னார் (ரலி) எண்ணினார்கள். எனவே, அன்னாரும் நேரடியாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றடைந்தார்கள்.

அங்கு சென்று பார்த்தபோது அங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இருக்கவில்லை. எனினும், உள்ளத்தில் வெட்க உணர்வு உருவாகியிருந்தது. எனவே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் தவறு ஏற்பட்டுவிட்டது. நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கடுமையாக நடந்து கொண்டேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மீது எந்த தவறும் இல்லை. தவறு என்னுடையது தான் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தங்களைப் பற்றி புகார் கூற சென்றுள்ளார் என்று யாரோ ஒருவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று கூறினார். அப்போது, ஒரு தரப்பு விஷயமாக அமையாமல் இருக்க நானும் எனது குற்றமற்ற நிலையை வெளிப்படுத்த செல்ல வேண்டும். அப்போதுதான் என்னால் எனது தரப்பு நியாயத்தை எடுத்துரைக்க முடியும் என்ற எண்ணம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு தோன்றியது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சபையை வந்தடைந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னிடம் தவறு நிகழ்ந்துவிட்டது. நான் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் சண்டையிட்டேன். நான் அன்னாரின் சட்டையை கிழித்துவிட்டேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

இந்த விஷயத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செவியுற்றபோது, கோபத்தின் அடையாளங்கள் அன்னார் (ஸல்) அவர்களின் முகத்தில் வெளிப்பட்டன.

அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களே! உங்களுக்கு என்ன நிகழ்ந்துவிட்டது? முழு உலகமும் என்னை நிராகரித்தபோதும், நீங்கள் என்னுடன் இல்லாதபோதும், அந்நேரத்தில் அபூபக்ர் மட்டுமே என் மீது ஈமான் கொண்டார். மேலும், எல்லா வகையிலும் எனக்கு உதவி செய்தார்.

பின்னர் வேதனையுடன் கூறினார்கள்: நீங்கள் இப்போதும் கூட என்னையும், அபூபக்ரையும் விட்டு விட மாட்டீர்களா?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (அந்த சபையில்) நுழைந்து விட்டார்கள்.

இதன் தொடர்ச்சியின் விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (அந்த சபையில்) உள்ளே நுழைந்ததும் இந்த வழிமுறையை மேற்கொண்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு அதன் முன்னுரையை வடித்துள்ளார்கள்:

இதுவே உண்மையான நேசரின் முன்னுதாரணமாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதில் என்னுடைய தவறு எதுவும் இல்லை. உமரே தவறிழைத்தார் என்று கூறுவதற்கு பகரமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு உள்ளத்தில் வேதனை ஏற்பட்டுக் கொண்டிருந்ததை அன்னார் (ரலி) அவர்கள் கண்டபோது, தன்னால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு துன்பம் ஏற்படுவதை அன்னாரால் உண்மையான நேசர் என்ற ரீதியில் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வந்தவுடனேயே அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் முழங்காலிட்டு அமர்ந்துவிட்டார்கள். மேலும் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உமர் மீது எந்த தவறும் இல்லை. தவறு என்னுடையதுதான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எந்த அளவுக்கு உண்மையான நேசராக இருந்தார்கள் என்று பாருங்கள்! தமது நேசரின் உள்ளத்திற்கு துன்பம் ஏற்படுவதை அன்னார் (ரலி) அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது கோபம் கொண்டுள்ளார்கள் என்பதை அன்னார் (ரலி) அவர்கள் கண்டு அதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மகிழ்ச்சி அடையவில்லை. பொதுவாக மக்களின் பழக்கம் இவ்வாறு இருக்கின்றது. அதாவது, தமது எதிர்தரப்பிற்கு ஏச்சுபேச்சு கிடைப்பதை பார்க்கும்போது, நல்ல ஏச்சு கிடைக்கட்டும் என்று மக்கள் மகிழ்ச்சியடைவார்கள். ஆனால், ஓர் உண்மையான நேசர் இந்த விஷயத்தை விரும்பவில்லை. அதாவது, என்ன காரணமாக இருந்தாலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உள்ளம் வேதனையடைவதை அன்னார் (ரலி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் குற்றவாளி ஆகிவிடுகிறேன். ஆனால், எனது நேசரின் உள்ளத்திற்கு துன்பம் ஏற்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன். எனவே அன்னார் (ரலி) அவர்கள் மிகவும் வேதனையுடன் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உமர் மீது தவறில்லை. தவறு என்னுடையதுதான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மனவேதனையை போக்குவதற்காக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உள்ளத்திற்கு துன்பம் ஏற்படாமல் இருப்பதற்காக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அநீதியிழைக்கப்பட்டவராக இருந்தபோதும் அநீதியாளராக தன்னை ஒப்புக் கொண்டார்கள் என்றால் பின்னர் இது எவ்வாறு சாத்தியமாகும். அதாவது, ஒரு நம்பிக்கை கொண்ட அடியார், இறைவனின் நெருக்கத்தை பெற்றுதரக்கூடிய பணியை இறை திருப்தியை பெறுவதற்காக செய்யாமல் இருப்பது என்பது எப்படி சாத்தியமாகும்? (குத்பாதே மஹ்மூத் தொகுதி 27, பக்கம் 313-314)

அல்லாஹ்வின் திருப்திக்காக பணி செய்வதும், அல்லாஹ் கோபம் கொள்ளும் எந்த பணியையும் செய்யாமல் இருப்பதுமே நம்பிக்கையாளரின் அடையாளம் ஆகும். இந்த அடிப்படையில் அன்னார் (ரலி) தனது முன்னுதாரணத்தை வெளிப்படுத்தினார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் தவ்ராத்தின் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு வந்தார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது தவ்ராத் ஆகும் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களின் கூற்றை கேட்டு மௌனமாக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தவ்ராத்தை திறந்து ஓத ஆரம்பித்து விட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகத்தில் அதிருப்தியின் அடையாளங்கள் வெளிப்பட்டன. அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது கோபமுற்றார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனை விரும்பவில்லை என்பதை நீர் காணவில்லையா? என்று கேட்டார்கள்.

அன்னார் (ரலி) அவர்களின் கூற்றை கேட்ட பிறகே, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் கவனம் ஏற்பட்டது. அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகத்தைப் பார்த்தார்கள். அன்னாருக்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முகத்தில் கோபத்தின் அடையாளங்கள் தென்பட்ட போது அன்னார் (ரலி) அவர்கள் வருத்தம் தெரிவித்தார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மன்னிப்பு வேண்டினார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி-6, பக்கம் 253)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை ஒரு வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கோபம் என்பது இஸ்லாமிய போதனைக்கு எதிரான தவ்ராத்தின் ஒரு வசனத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஓதியதால் அமைந்திருந்தது. அதன் காரணமாகவே கோபம் ஏற்பட்டதே தவிர, தவ்ராத்தை ஏன் ஓதினார்? என்று அல்ல. ஒருவருக்கு அந்த தஃப்ஸீரை படிப்பதற்கு ஆர்வம் இருக்கும் என்றால், பின்னர் தஃப்ஸீர் கபீர் தொகுதி 6-ல் சூரா அந் நூரின் வசனம் 3-ன் கீழ் எஞ்சிய விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன. அங்கிருந்து அவர் அதனை பார்த்துக் கொள்ளலாம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஸஹாபிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை எவ்வாறு பின்பற்றி வந்தார்கள் என்பதற்கான சான்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த சம்பவத்திலிருந்து கிடைக்க முடியும். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு,சில அரபுக் கோத்திரங்கள் ஸகாத் கொடுப்பதற்கு மறுத்துவிட்ட போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களுக்கு எதிராக போர் புரிவதற்கு தயாராகிவிட்டார்கள். அந்நேரத்தில் நிலைமை எவ்வாறு மோசமாக இருந்தது என்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) போன்ற மனிதர் கூட அந்த மக்களுடன் மென்மையுடன் நடக்க வேண்டும் என்று ஆலோசனைக் கூறினார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

அபூகஹாஃபாவின் மகனுக்கு என்ன ஆற்றல் உள்ளது? அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய உத்தரவை ரத்து செய்வதற்கு அவருக்கு என்ன தகுதி உள்ளது? இறைவன் மீது ஆணையாக! இந்த மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஒட்டகத்தைக் கட்டக் கூடிய ஒரு கயிற்றை ஸகாத்தாக கொடுத்திருந்தாலும் நான் அந்த கயிற்றை அவர்களிடமிருந்து வசூல் செய்தே தீருவேன். மேலும், அந்த மக்கள் ஸகாத் கொடுக்கும் வரை ஓயமாட்டேன்.

இது புகாரியின் அறிவிப்பாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் இந்த விவகாரத்தில் எனக்கு ஆதரவு அளிக்க முடியாது என்றால் ஆதரவு

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அளிக்க வேண்டாம். நான் தனியாகவே அவர்களை எதிர்கொள்வேன். இது இறைத் தூதர் (ஸல்) அவர்களை பின்பற்றுதலின் பெரும் வெளிப்பாடாகும். மிகவும் அபாயகரமான சூழல் இருந்தபோதும், போருக்கு எதிராக பெரும் ஸஹாபிகள் ஆலோசனை வழங்கிய போதும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உத்தரவை முழுமை செய்வதற்காக அன்னார் (ரலி) எல்லா வகையான அபாயத்தையும் எதிர்கொள்வதற்கு தயாராகிவிடுகின்றார்கள். அதேபோன்று, உஸாமாவின் படையை தடுத்து நிறுத்துவது தொடர்பாகவும் ஸஹாபிகள் மிகவும் அழுத்தம் கொடுத்தனர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எதிரி மதீனாவை வெற்றிக் கொள்ளும் அளவில் வலிமை பெற்றுவிட்டாலும், முஸ்லிம் பெண்களின் பிணங்களை நாய்கள் இழுத்துக் கொண்டு சென்றாலும் கூட எந்தப் படையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைப்பதற்கு தயார் செய்திருந்தார்களோ அதனை என்னால் தடுத்து நிறுத்த முடியாது. (தஃப்ஸீரே கபீர் தொகுதி8,பக்கம் 108-109)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என்னிடம் பஹ்ரைனின் செல்வங்கள் வந்தால் நான் உங்களுக்கு இன்ன இன்ன அளவில் கொடுப்பேன்.

அன்னார் (ஸல்) அவர்கள் கைகளால் சைகை செய்து கூறினார்கள்.

ஆயினும், அந்த செல்வம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது வந்தடைந்தன. பஹ்ரைன் செல்வம் வந்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்பவருக்கு கட்டளை வழங்கி அறிவிப்பு செய்ய வைத்தார்கள். அவரும் இவ்வாறு அறிவிப்பு செய்தார்:

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பொறுப்பில் யாருக்காவது ஏதாவது கடன் இருந்தால் அவர் எம்மிடத்தில் வரட்டும். இதைக் கேட்டுவிட்டு ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) கூறுகின்றார்கள்:

நானும் அன்னாரிடத்தில் சென்றேன். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னிடம் இவ்வாறு வாக்குறுதி வழங்கியிருந்தார்கள் என்று கூறினேன். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இரண்டு கை நிறைய வழங்கிவிட்டார்கள்.

அலி பின் மதீனீ கூறிவந்தார்கள்: ஸுஃப்யான் இரண்டு கைகளையும் ஒன்று கூட்டி நிறைத்துக் கொண்டார். மூன்று முறை அவ்வாறு செய்தார். (ஸஹீஹுல் புகாரி, பாடம் ஃபர்ஸுல் கம்ஸ், ஹதீஸ் - 3137, உருது மொழியாக்கம், நஸாரத் இஷாஅத் ரப்வா, தொகுதி 5, பக்கம் 485-486)

ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பஹ்ரைனிலிருந்து செல்வம் வந்தபோது நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்ததைக் கேட்டேன். அதாவது, எந்த நபருக்காவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஏதாவது வாக்குறுதி வழங்கியிருந்தால் அவர் (என்னிடம்) வரட்டும். மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அந்த மக்களுக்கு வழங்கினார்கள். பின்னர், ஹஸ்ரத் அபூபஷீர் மாஸ்னி (ரலி) அவர்கள் வந்தார்கள். எம்மிடம் ஏதாவது வந்தால் நீங்கள் வரவும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அன்னார் (ரலி) கூறினார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு இரண்டு, மூன்று லப் நிறைய வழங்கினார்கள். அதனை அன்னார் (ரலி) அவர்கள் ஆயிரத்து நானூறு திர்ஹமாகக் கண்டார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 2, பக்கம் 243, தாருல்குதுபில் இல்மியா பெய்ரூத் 1990)

லப் என்பதன் பொருள் இரண்டு கைகளால் முழுமையாக நிறைத்து (கொடுப்பது) ஆகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஸஹாபா பெருமக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு, தண்ணீர் கொடுங்கள் என்று அன்னார் (ரலி) தமது அடிமையிடம் கூறினார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு, மண் பாத்திரத்தில் அடிமை தண்ணீர் கொண்டு வந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தமது இரண்டு கரங்களால் பாத்திரத்தை பிடித்தார்கள். தாகத்தை தணிப்பதற்காக தமது வாய்க்கு அருகில் (பாத்திரத்தைக்) கொண்டு சென்றபோது பாத்திரம் தேனால் நிறைந்திருப்பதையும் அதில் தண்ணீர் கலந்திருப்பதையும் கண்டார்கள். அன்னார் (ரலி) அந்த பாத்திரத்தை வைத்துவிட்டார்கள். தண்ணீர் அருந்தவில்லை. பின்னர் அடிமையை நோக்கிப் பார்த்தார்கள். இது என்ன? என்று அவரிடம் கேட்டார்கள். தண்ணீரில் தேனைக் கலந்துவிட்டேன் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் பாத்திரத்தை மிகவும் உற்று நோக்கி பார்த்தார்கள்.

சில நொடிப் பொழுதிலேயே அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகளின் வெள்ளம் பெருக்கெடுத்தது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தேம்பி, தேம்பி அழத் தொடங்கினார்கள். அழுது, அழுது அன்னார் (ரலி) அவர்களின் குரல் உயர்ந்துவிட்டது. அன்னாரிடம் மிகவும் அதிகமான உருக்கம் ஏற்பட்டது.

அன்னார் (ரலி) மீது கவனம் மக்கள் செலுத்தினார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! தங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? தாங்கள் இந்த அளவு கடுமையாக ஏன் அழுகின்றீர்கள்? எங்கள் தாய், தந்தை தங்கள் மீது அர்ப்பணம்! தாங்கள் ஏன் ஏங்கி, ஏங்கி அழுகின்றீர்கள்? என்று மக்கள் கேட்டனர். ஆனாலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுவதை நிறுத்தவில்லை. இன்னும் கூறப்போனால், அருகில் இருந்த அனைத்து மக்களும் அன்னாரைப் பார்த்து அழத் தொடங்கிவிட்டனர். அழுது, அழுது அவர்களும் அமைதியாகிவிட்டனர். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்ந்து அழுது கொண்டே சென்றார்கள். அன்னாரின் கண்ணீர் சற்று நின்றபோது, அழுகைக்கான காரணத்தை அன்னார் (ரலி) அவர்களிடம் மக்கள் கேட்டனர். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! இவ்வாறு ஏன் அழுகின்றீர்கள்? இறுதியில் என்ன விஷயம் தங்களை அழ வைத்துள்ளது? என்றனர். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தமது ஆடையின் முனையைக் கொண்டு கண்ணீரைத் துடைத்தவாறும், தம்மை கட்டுப்படுத்திக் கொண்டும் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணப்படுக்கையில் இருந்த நாட்களில் நான் அன்னார் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது கரங்களால் ஏதோ ஒன்றை அகற்றிக் கொண்டிருப்பதைக் நான் கண்டேன். ஆயினும், அந்தப் பொருள் எனக்கு தென்படவில்லை. என்னிடம் இருந்து விலகி விடு! என்னிடமிருந்து அகன்று விடு! என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். நான் இங்கும் அங்கும் பார்த்தேன். ஆனால் எதுவும் தென்படவில்லை. நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஒரு பொருளை தங்களிடமிருந்து அகற்றிக் கொண்டிருந்ததை நான் கண்டேன். ஆனால், தங்களிடம் எந்தப் பொருளும் எனக்கு தென்படவில்லை.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் என்னை நோக்கியவாறு கூறினார்கள்: உண்மையில், அது உலகமாக இருந்தது. அது தனது அனைத்து சுகபோகங்களுடனும், அருட்கொடைகளுடனும் என்னிடம் வந்தது. விலகி விடு! என்று நான் அதனிடம் கூறினேன்.

ஓர் ஆன்மீக காட்சியின் தன்மை அன்னார் (ஸல்) மீது வெளிப்பட்டு இருந்தது.

அப்போது, தாங்கள் என்னிடமிருந்து தப்பித்துவிடுவதால் என்ன நேர்ந்துவிடப் போகிறது? தங்களுக்குப் பிறகு வரக்கூடிய மக்கள் என்னிடமிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்று கூறியவாறு அது விலகிவிட்டது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நிம்மதியிழந்து தலையை ஆட்டினார்கள். மேலும், வேதனை மிகு குரலில் கூறினார்கள்: மக்களே! இந்த தேன் கலந்த தண்ணீரின் காரணத்தால், இந்த உலகம் என்னை ஆட்கொண்டு விட்டதோ! என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே

தான் நான் தேம்பி தேம்பி அழுதேன்.

(ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் 100 சம்பவங்கள். பக்கம் 68-70, பைத்துல் இல்ம் லாஹூர்)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இந்த அளவிற்கு அல்லாஹ்வின் மீதான அச்சம் இருந்தது.

ஈராக்கிய வெற்றிகளின்போது, ஒரு விலை உயர்ந்த போர்வை கிடைத்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் படையினரின் ஆலோசனையுடன் அந்தப் போர்வையை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்கள். மேலும், இதனை தாங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். தங்களுக்காக இது அனுப்பி வைக்கப்படுகிறது என்று கடிதம் எழுதினார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதனை பெற்றுக் கொள்வதை விரும்பவில்லை. தமது உறவினர்களுக்கும் அதனை கொடுக்கவில்லை. மாறாக, அதனை ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு கொடுத்துவிட்டார்கள். (ஸய்யிதுனா சித்தீகே அக்பர் (ரலி) அவர்களின் இரவும் பகலும் எனும் நூல், பக்கம் 107, மக்தபதுல் ஹுர்மைன் லாஹூர் 1437)

எஞ்சிய விஷயங்கள் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும். தற்போது நான் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகிறேன். அதன் பிறகு நான் அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். இன்ஷாஅல்லாஹ்.

முதலாவதாக, தஹ்ரீகே ஜதீத் துறையின் வகீலுஸ் ஸராத் ஆக இருந்த மதிப்பிற்குரிய ஸமீயுல்லாஹ் ஸியால் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 89-வயதில் இறை நியதிக்கேற்ப மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அல்லாஹ்வின் அருளால் மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் தந்தையார் ரஹ்மதுல்லாஹ் ஸியால் ஸாஹிப் ஆவார்கள். ஸமீயுல்லாஹ் ஸியால் ஸாஹிப் அவர்களின் குடும்பத்தில் அன்னாரின் தந்தையார் ரஹ்மதுல்லாஹ் ஸாஹிப் ஸியால் அவர்களின் மூலமாக அஹ்மதியத் தோன்றியது.

அன்னார் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் 1938-ல் பைஅத் செய்தார்கள். அந்தநேரத்தில் ஸமீயுல்லாஹ் ஸியால் ஸாஹிப் அவர்களின் வயது 4 வயதாக இருந்தது. பைஅத்தைப் பற்றி அன்னாரின் தாயாருக்கு தெரிய வந்தபோது அன்னார் தமது குடும்பத்தை விட்டு விலகி விட்டார்கள். மேலும், அன்னாரை தம்முடன் அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். இந்த சம்பவம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு கூறப்பட்டபோது, தாங்கள் வழக்கு தொடருங்கள். மேலும், பிள்ளையை திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஹுஸூர் (ரலி) அவர்கள் அன்னாரின் தந்தையாரிடம் கூறினார்கள். எனவே, வழக்கு தொடரப்பட்டு பிள்ளையை திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறு அன்னார் தமது தந்தையாரின் பராமரிப்பின் கீழ் வந்துவிட்டார்கள். மேலும், அன்னாரே மர்ஹூம் அவர்களை வளர்த்து பராமரித்தார்கள்.

ஸமீயுல்லாஹ் ஸியால் ஸாஹிப் அவர்கள் குழப்பங்களின் காலக்கட்டத்தில் கிழக்கு பஞ்சாபில் ஷஹீதாகிவிட்டார்கள். அதன் பிறகு, அன்னாரின் அஹ்மதியல்லாத உறவினர்கள் அனைவரும் அன்னாரை திரும்ப பெறுவதற்கு முயற்சி செய்தார்கள். ஜமாஅத்திலிருந்து விலக்குவதற்கு முயன்றார்கள். ஆனால், அன்னார் அஹ்மதிய்யத்தை விட்டு விலகவில்லை. 1949-ல் தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தில் அன்னார் மெட்ரிக் தேர்ச்சி பெற்றார்கள். 1954-ல் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் அன்னார் B.A பயின்றார்கள். பின்னர், 1956-ல் லாஹூர் அரசாங்க கல்லூரியில் M.A புள்ளியியல் படித்தார்கள். அன்னாருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். ஒருவர் கனடாவில் டாக்டராக உள்ளார். இரண்டாவது மகன், இஃப்திகாருல்லாஹ் ஸியால் ஸாஹிப் தஹ்ரீகே ஜதீத் துறை ரப்வாவில் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளார்கள். 1949-ல் ஸியால் ஸாஹிப் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். ஏனைய வாழ்க்கையை அர்ப்பணித்த மக்களுடன் அன்னாருக்கும் தேர்வு நடத்தப்பட்டது. நேர்காணல் நடந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களே நேரடியாக கேள்வித்தாள்களை தயார் செய்தார்கள். அதன் பிறகு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டலின்படி, மேற்படிப்பிற்காக தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி லாஹூரில் சேர்ந்தார்கள். மேலும், அங்கு அன்னார் முதலில் B.sc படித்தார்கள். பின்னர், M.sc புள்ளியியல் துறையில் டிகிரி பெற்றார்கள். 1953-ல், (ஜமாஅத்) அலுவலகங்களில் துவக்கத்தில் அன்னார் பணியமர்த்தப்பட்டார்கள். பின்னர் பல்வேறு அலுவலகங்களில் அன்னார் பணி செய்து வந்தார்கள். 1960 முதல் 1963 வரை சிராலியோனில் அன்னாருக்கு தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்தது. 1983-ல் அன்னார் வகீலுஸ் ஸராத் மற்றும் ஸின்அத் வ திஜாரத் ஆக பணி நியமனம் செய்யப்பட்டார்கள். 1988 முதல் 1999 வரை வகீலுத் தீவானாகவும், 1999 முதல் 2012 வரை வகீலுஸ் ஸராத் மற்றும் ஸின்அத் வ திஜாரத் ஆகவும் தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. 2012-லிருந்து மரணம் வரை அன்னார் வகீலுஸ் ஸராத் ஆக இருந்தார்கள். அன்னார் 69 ஆண்டு காலம் தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள். அதுமட்டுமின்றி, அஞ்சுமன் மற்றும் தஹ்ரீகே ஜதீதின் ஏராளமான கமிட்டிகளிலும் உறுப்பினராக இருந்தார்கள். சில பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளின் டைரக்டராகவும் அன்னார் இருந்தார்கள். அதேபோன்று, குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் முஃதமீம் ஆக நீண்ட காலம் பல்வேறு துறைகளில் பணி செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது.

அன்னாரின் துணைவியார் அமதுல் ஹஃபீழ் ஸியால் ஸாஹிபா கூறுகின்றார்கள்:

64 ஆண்டு கால இல்லற வாழ்க்கையில் நான் அன்னாரை மிகவும் நல்லவராகவும், அனுதாபம் கொண்டவராகவும், நம்பிக்கை கொண்டவராகவும், அன்பு செலுத்தக் கூடியவராகவும் கண்டுள்ளேன். எல்லா பணிகளிலும் தம்மை விட மற்றவருக்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். மேலும், காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளுக்கு எல்லா விஷயங்களை விடவும் முன்னுரிமை வழங்கி வந்தார்கள்.

துணைவியார் கூறுகின்றார்கள்: எனக்கு திருமணம் நடந்தபோது மர்ஹூம் தொடக்கத்திலேயே தான் ஒரு வாழ்க்கையை அர்ப்பணித்த நபர் என்பதையும், வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவரின் மனைவியும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார் என்ற விஷயத்தையும் எனக்கு புரிய வைத்துவிட்டார்கள்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: மர்ஹூம் ஏழைகளை பராமரிக்கக் கூடியவராக இருந்தார்கள். விருந்து உபசரிப்பும் எங்கள் வீட்டில் அதிகமாக நடந்து வந்தது.

அன்னாரின் மகன் இஃப்திகாருல்லாஹ் ஸியால் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

குழந்தைப் பருவம் முதலே ஜமாஅத்துடன் நன்றியுணர்வும், அன்பும் அன்னாரிடம் மிக அதிகமாக இருந்தது. 1947-ல் நடைபெற்ற குழப்பங்களில் அன்னாரின் தந்தையார் ஷஹீதாகிவிட்டபோது ஏற்கனவே கூறப்பட்டது போன்று அன்னார் முற்றிலும் தன்னந்தனி நபராக ஆகிவிட்டார்கள். அன்னாரின் உறவினர்களில் அன்னாரின் தந்தையார் மட்டுமே அஹ்மதியாக இருந்தார்கள். தாயும் விட்டு விட்டு சென்றுவிட்டார்கள். நீங்கள் அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள். நாங்கள் உங்களுடைய அனைத்து உலகியல் மற்றும் கல்வி செலவினங்களையும் பார்த்துக் கொள்கிறோம் என்று உறவினர்கள் அன்னாரிடம் கூறினார்கள்.

ஆனால், அஹ்மதிய்யத்தின் மீதான அன்பு மற்றும், அஹ்மதிய்யத்தின் உண்மையின் மீதான நம்பிக்கை ஆகியவற்றின் காரணமாக தமது ஈமானில் அன்னார் நிலைநின்றார்கள். வக்ஃபிற்கான இந்த தொடர் தமது சந்ததிகளில் மேலும்

தொடர வேண்டும் என்ற பெரும் விருப்பம் அன்னாருக்கு இருந்தது.

அன்னாரின் மகன் கூறுகின்றார்கள்: எனவே நான் வக்ஃப் செய்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், இங்கு லண்டன் வந்திருந்தபோது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களிடம் அன்னார் சுயமே அதனை கூறினார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். மேலும், இந்தத் தொடர் பிள்ளைகளிடத்திலும் தொடர்வதே அசல் வக்ஃப் ஆகும் என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

மார்க்கம் அல்லது உலகியல் கஷ்டங்கள் வரும்போது அன்னார் இறைவனுக்கு முன்னால் குனிந்து விடுவார்கள். மேலும், அந்த கஷ்டங்கள் தீருவதற்காக மிகவும் உருக்கத்துடன் துஆ செய்து வருவார்கள்.

அடுத்து, அன்னாரின் மற்றொரு மகன் எழுதுகின்றார்கள்: முழு வாழ்நாளிலும் ஒரு முறை கூட தஹஜ்ஜுத் தொழுகையை விட்டதாக நான் கண்டதில்லை. ஏழைகளுக்கு தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்து வந்தார்கள். அன்னாரின் மரணத்திற்குப் பிறகு, ஏராளமான மக்கள் என்னிடம் வந்து குறிப்பாக இதனை கூறினார்கள். அதாவது, எங்களுக்கு எப்போதெல்லாம் ஏதாவது பணத்திற்கான தேவை ஏற்பட்டு வந்ததோ நாங்கள் உடனடியாக ஸியால் சாஹிபிடம் செல்வோம். மேலும், அன்னார் எப்போதும் எங்களுக்கு உதவி செய்து வந்தார்கள். சில நேரங்களில் குடும்பங்களில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு, அதேநேரம் ஜமாஅத் தொண்டிற்கான எதிர்பார்ப்பு அப்போது இருக்குமென்றால் அன்னார் அந்தநேரம் ஜமாஅத் பணிகளை கவனிப்பதற்காக புறப்பட்டுவிடுவார்கள். தமது குடும்ப பிரச்சனைகளை அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிடுவார்கள்.

அன்னாரின் மகன் கூறுகின்றார்கள்: எனக்கு எப்போதும் ஜமாஅத்தின் மீது அன்பு கொள்வதற்கும், கிலாஃபத்திற்கு நன்றியுடையவராக இருப்பதற்கும் அறிவுரை வழங்கி வந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் நாவிலிருந்து வெளிவந்த ஒவ்வொரு சொல்லின் மீதும் அன்னாருக்கு அதிக நம்பிக்கை இருந்து வந்தது. இது தொடர்பாக அன்னார் கூறிவந்தார்கள். அதாவது, அன்னார் துவக்க காலத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அப்போது சர்ச்சில் 80 வயதில் மீண்டும் பிரதராக ஆகியிருந்தார். சர்ச்சில் 80 வயதில் பிரதமராக முடியும் என்றால், அவ்வளவு காலம் உம்மால் ஏன் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற முடியாது? என்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

எனவே இந்தக் கூற்றை மனதில் வைத்து அன்னார் இவ்வாறு கூறிவந்தார்கள். நான் இதிலிருந்து இந்த முடிவுக்கு வந்திருந்தேன். அதாவது அந்த குரூப்பில் நாங்கள் எத்தனை நபர்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களாக இருந்தோமோ குறைந்த பட்சம் 80 வருடங்கள் நிச்சயம் நாங்கள் வாழ்நாளைப் பெறுவோம். அல்லாஹ் 80 வருடம் வரை எங்களுக்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு வழங்குவான். ஆக, சவ்த்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் மற்றும் முஸ்லிஹுத்தீன் சாஹிப் ஆகியோரும் அன்னாரின் தோழராக இருந்தார்கள். அனைவரும் 80-வருடத்திற்கு கூடுதலாக ஆயுளை பெற்றார்கள்.

அன்னாரின் மருமகள் கூறுகின்றார்கள்: எனது சிறு வயதிலேயே எனது தந்தையார் இறந்துவிட்டார்கள். மாமனார் வடிவில் அன்னாரிடம் எனக்கு தந்தையின் அன்பு கிடைத்தது. 22 ஆண்டுகால திருமண வாழ்க்கையில் நான் எப்போதும் அன்னாரிடம் பரிவு மற்றும் தந்தையின் அன்பையே கண்டேன். அஹ்மதிய்யத்தின் உண்மையான நேசராகவும், கிலாஃபத்தின் மீது ஆழமான அன்பு கொண்டவராகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும், விருந்து உபசரிப்பவராகவும், உண்மையான மனிதராகவும் அன்னார் இருந்தார்கள். அமரும்போதும், எழும்போதும் அல்லாஹ்வை நினைவுகூர்வார்கள். சின்னச் சின்ன விஷயங்களிலும் நன்றி கூறிவந்தார்கள். எனது பிள்ளைகளின் தர்பிய்யத்திலும் மிக முக்கியப் பங்கு ஆற்றியுள்ளார்கள். திருக்குர்ஆன் மொழியாக்கத்தை கற்பதற்கும், ஹஸ்ரத் மஸீஹ் மவூத் (அலை) அவர்களின் நூல்களைப் படிப்பதற்கும் அவர்களுக்கு கவனமூட்டி வந்தார்கள். பின்னர் அவர்களுக்கு பரீட்சையும் நடத்தி வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: பிள்ளைகள் தந்தைவழி பாட்டனாருடன் அமரும்போதெல்லாம் எப்போதும் ஜமாஅத்தின் வரலாறையும், கலீஃபாக்களின் பரிவு மற்றும் அன்பைப் பற்றிய சம்பவங்களையும் எடுத்துரைத்து வந்தார்கள். சின்னஞ்சிறு பிள்ளை வீட்டிற்கு வந்துவிட்டால் கூட அவருக்கும் விருந்து உபசரிப்பு செய்யாமல் வீட்டிலிருந்து செல்வதற்கு அனுமதித்தது கிடையாது.

நாயிப் வகீலுஸ் ஸராத் பாஸில் சாஹிப் கூறுகின்றார்கள்: ஸமீயுல்லாஹ் ஸியால் சாஹிப் மிகவும் அனுதாபம் கொண்ட நபராக இருந்தார்கள். கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பும் நேசமும் கொண்டிருந்தார்கள். அலுவலகத்தில் ஊழியர்களுக்கு பொருளாதார உதவியும் செய்து வந்தார்கள். எப்போதும், காலத்தின் கலீஃபாவுடனான தொடர்பில் இருந்து வருவதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். கூறுகின்றார்கள்: எங்களுக்கு எப்போதும் இவ்வாறு அறிவுரை வழங்கி வந்தார்கள்.

அதாவது, ஜமாஅத்தின் ஒவ்வொரு பைசாவையும் பாதுகாக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று பைசா எங்கிருந்து வரும் என்ற கவலை இல்லை. பைசாவை பாதுகாப்பவர்கள் எங்கிருந்து வருவார்கள் என்பதே அசல் கவலையாகும். (அல் வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 319) அத்தகைய மக்கள் கிடைத்து வந்துள்ளனர்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: ஒரு வாழ்க்கையை அர்ப்பணித்தவர் அல்லது ஊழியர் அல்லது ஒரு அஹ்மதி சந்திப்பதற்காக வந்தால், அவரிடம் இவ்வாறே கூறிவந்தார்கள்:

அதாவது, ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதிலேயே அதிக பரக்கத் உள்ளது. எவர் தொண்டாற்றுகிறாரோ அவருக்கு அல்லாஹ் எல்லையற்ற அருள் புரிகின்றான். அல்லாஹ் அவர்களின் தேவையை தானே பூர்த்தி செய்து கொண்டு செல்வான். தம்முடைய உதாரணத்தையும் கூறுவார்கள். நான் ஒன்றுமற்றவனாக இருந்தேன். அல்லாஹ் எனக்கு கணக்கின்றி அருளியுள்ளான். இது வக்ஃபின் பரக்கத் மட்டுமே ஆகும்.

நஸ்ரீன் ஹய் சாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது குடும்பத்தில் மிக முக்கிய நபர்களைச் சேர்ந்தவராக மர்ஹூம் இருந்தார்கள். எனது தாயும், தந்தையும் எப்போதும் அன்னாருக்கு மிகுந்த கண்ணியம் வழங்கி வந்தார்கள். அன்னாருக்கு பெண் பிள்ளையே கிடையாது. எனக்கு 8 வயதானபோது அன்னாரும், பெரியன்னையும் என்னை தத்தெடுத்துக் கொண்டார்கள். அதன் பிறகு திருமணம் வரை நான் அவர்களுடன் இருந்தேன். இருவரும் என்னை எப்போதும் தமது சொந்த மகளைப் போன்று பார்த்துக் கொண்டார்கள். குழந்தைப் பருவம் முதலே எனது எல்லா விருப்பத்தையும் கருத்தில் கொண்டார்கள். சிறந்த கல்வியை வழங்கினார்கள். ஜமாஅத் முரப்பியுடன் எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

ஃபஸ்ல் பவுன்டேஷன் செயலர் மஹ்மூத் தாஹிர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் B.A படித்து முடித்த பிறகு, ஆரம்ப கால பணி நியமனம் நிகழ்ந்தது. அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப நான் M.A படிப்பதற்காக அனுப்பப்பட இருந்தேன். அப்போது அலுவலகத்தில் ஒருவர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களிடம், நீங்கள் இவரை M.A படிப்பதற்காக அனுப்புகின்றீர்கள். ஆனால், இவர் M.A முடித்துவிட்டு வேறு எங்கும் ஓடிவிடப் போகின்றார். இவர் உலகப் பணிகளில் ஈடுபட்டுவிடக்கூடாது என்ற

தனது ஜயத்தை வெளிப்படுத்தினார். அப்போது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஸியால் (வாசிகள்) நன்றி கொன்றவர்களாக இருப்பதில்லை.

தஹ்ரீகே ஜதீத் பொறுப்பாளரும், வாழ்க்கையை அர்ப்பணித்தவருமான இம்ரான் பாபர் சாஹிப் கூறுகின்றார்கள்: எனக்கு பதினைந்து வருடங்கள் அன்னாருடன் பணி செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. மிகவும் வலிமையான உடல் அமைப்பிற்கு சொந்தக்காரராக இருந்தார்கள். ஜமாஅத் பணிகள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுடன் பேசுவதற்கு ஒருபோதும் தயங்கியதில்லை. இரயில் வண்டியில் அன்னாருடன் பயணம் செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. பயணத்தின்போது கண்டிப்பாக தப்லீக் செய்து வந்தார்கள். அருகில் உள்ள அனைத்து நபர்களும் கேட்க வேண்டும் என்பதற்காக மிக உரத்த குரலில் தப்லீக் செய்து வந்தார்கள்.

வகீலுல் மால் அவ்வல் லுக்மான் சாஹிப் கூறுகின்றார்கள்:

கிலாஃபத்தின் குரலை தாமும் செவிமடுத்து வந்தார்கள். மற்றவர்களுக்கும் கவனமூட்டி வந்தார்கள். எப்போது தஹ்ரீகே ஜதீதிற்கான அறிவிப்பு செய்யப்பட்டாலும் உடனடியாக தமது சந்தாவை செலுத்திவிடுவார்கள். மேலும், வாக்குறுதியையும் கூறிவிடுவார்கள்.

தஹ்ரீகே ஜதீத் அலுவலகத்தில் ஷேக் ஹாரிஸ் சாஹிப் இருக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

நான் வாழ்க்கையை அர்ப்பணித்தபோது அன்னார் எல்லாகட்டத்திலும் எனக்கு வழிகாட்டினார்கள். மிகவும் அன்புடனும், பரிவுடனும் என்னுடன் நடந்து கொண்டார்கள். மிகவும் தைரியசாலியாகவும், பற்று மிக்க வாழ்க்கையை அர்ப்பணித்தவராகவும் அன்னார் திகழ்ந்தார்கள். ஜமாஅத்தின் செல்வங்களை சேமிப்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்கள்.

அடுத்து, இந்த ஹாரிஸ் சாஹிப் எழுதுகின்றார்கள்: 2015-ல் பாகிஸ்தான் இன்ஜினீயரிங் கவுன்சில் சேர்மனான இன்ஜினீயர் ஜாவீத் சாஹிப் இஸ்லாமாபாத்திலிருந்து ரப்வா சுற்றுப் பயணத்தில் வந்திருந்தார்கள். ஜமாஅத்தின் மற்ற சான்றோர்களை மட்டுமின்றி ஸியால் சாஹிப் அவர்களையும் அவர் சந்தித்தார். இந்த சுருக்கமான சந்திப்பில் அன்னார் தப்லீக்கிற்கான வாய்ப்பையும் கை நழுவி செல்ல விட்டுவிடவில்லை. அவருக்கு மிக நல்ல முறையில் தப்லீக் செய்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் வாழ்க்கையை அர்ப்பணித்த மகனுக்கும் வக்ஃபை நிறைவேற்றுவதற்குரிய நற்பேறை வழங்குவானாக. கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் அன்னாரின் பிள்ளைகளை அல்லாஹ் இணைத்து வைப்பானாக. மேலும் மர்ஹூமின் உறவினர்களுக்கு அமைதியை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு, முஅல்லிம் வக்ஃப்வே ஜதீத் மர்ஹூம் அலி அஹ்மது சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய சித்தீகா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் 85-வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அன்னாரின் மகனான அப்துல் ஹாதி தாரிக் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பி ஆவார். ஜாமிஆ அஹ்மதிய்யா கானாவின் ஆசிரியர் ஆவார். காதியானிற்கு அருகில் உள்ள பேரூசேச்சி எனும் இடத்தில் மர்ஹூமா பிறந்தார்கள். அன்னாரின் தந்தையாரான அப்துர் ரஹ்மான் சாஹிப் இளமையிலேயே 1944-ல் மரணமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், விதவையான மர்ஹூமாவின் தாயார் நவாப் பிபி சாஹிபா மற்றும் குழந்தைகளை தமது பராமரிப்பில் எடுத்துக் கொண்டார்கள். மேலும், காதியானிற்கு அழைத்துக் கொண்டார்கள். எனவே, ஹஸ்ரத் நவாப் அமதுல் ஹஃபீழ் பேகம் சாஹிபா (ரலி) அவர்கள் அன்னாரை தமது பங்களாவில் தங்க வைத்துக் கொண்டார்கள்.

முரப்பி சாஹிப் கூறுகின்றார்கள்: எனது தாய் வழி பாட்டி,ஹஸ்ரத் நவாப் அமதுல் ஹஃபீழ் சாஹிபா (ரலி) அவர்களுக்கு தொண்டாற்றும் நற்பேறு பெற்று வந்தார்கள். இவ்வாறு, பின்னர் இந்திய, பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எனது தாய் வழிப்பாட்டியை தமது பிள்ளைகளுடன் சிந்துவிலுள்ள நாஸிராபாத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு மர்ஹூமா வளர்ந்து பெரியவரானார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் மியான் அல்லாதத்தா சாஹிப் (ரலி) அவர்களின் மருமகளாக மர்ஹூமா இருந்தார்கள். ஒரு வாழ்க்கையை அர்ப்பணித்தவரின் மனைவியாக இருந்தார்கள். மேலும், ஒரு வாழ்க்கையை அர்ப்பணித்தவரின் தாயாராக இருந்தார்கள். மர்ஹூமா வாழ்க்கையை அர்ப்பணித்த கணவருடன் வக்ஃபின் முழுமையான ஆன்மாவுடன் வாழ்க்கையை அர்ப்பணித்தவரைப் போன்று வாழ்க்கையை கழித்தார்கள். மேலும், எல்லா வகையான அசாதாரண சூழ்நிலைகளிலும் வாழ்க்கையை அர்ப்பணித்த தமது கணவருக்கு முழு ஆதரவு வழங்கினார்கள். வாழ்நாள் முழுவதும் எவரிடமும் எந்த கோரிக்கையோ அல்லது எதிர்பார்ப்போ வைத்ததில்லை. எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராக மர்ஹூமா திகழ்ந்தார்கள். **பணிவு, இறையச்சம், ஏழ்மை, விருந்து உபசரிப்பு, மென்மையான நடத்தை, எளிமை, போதுமென்ற மனம், குறைகளை மறைத்தல், பொறுமை, மாபெரும் தைரியம் போன்ற நற்குணங்களும் அவற்றில் அடங்கும். வாழ்நாள் முழுவதும் எவரைக் குறித்தும் எந்தப் புகாரும் செய்ததுமில்லை. எவருடைய குறையைக் செவியுற்றதும் இல்லை.** எப்போதும், தம்மவர்களுடனும், குடும்பத்தினர்களுடனும் அன்பு மற்றும் கலப்பற்ற முறையிலும் நடந்து வந்தார்கள்.

ஐவேளை தொழுகைகளை மட்டுமின்றி தஹஜ்ஜுத் தொழுகையையும் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார்கள். அதேபோன்று தொடர்ந்து திருக்குர்ஆன் திலாவத் செய்து வந்தார்கள். இறுதி நாட்களில் உடல்நலக் குறைவினால் தொழுகையை சரியாக நிறைவேற்ற முடியாமல் இருந்தபோது, எஜமானனே! உனது இறைவணக்கத்தை சரியான முறையில் நிறைவேற்றும் அளவில் ஆரோக்கியத்தையும், தைரியத்தையும் எனக்கு தந்தருள்வாயாக என்றே துஆ செய்து வந்தார்கள்.

மர்ஹூமா பின்விட்டுச் சென்றவர்களில், அன்னாரின் இரண்டு மகள்களும் மூன்று மகன்களும் அடங்குவர். நான் கூறியதுபோன்று, ஒரு மகன் அப்துல் ஹாதி தாரிக் சாஹிப் கானாவில் ஜமாஅத் முரப்பியாக உள்ளார்கள். மேலும் அங்கு செயல் களத்தில் இருந்ததன் காரணமாக ஜனாஸாவில் அன்னாரால் கலந்து கொள்ள முடியவில்லை.

அவர்கள் அனைவருக்கும் பொறுமையையும், தைரியத்தையும் அல்லாஹ் வழங்குவானாக. மர்ஹூமாவின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை அவர்களுக்கு வழங்குவானாக. மேலும் மர்ஹூமாவுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும், அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

தமிழாக்கம் :
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

# ஜுமுஆ பேருரை

**அமெரிக்காவிலுள்ள சீயோனின் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் திறப்பின்போது, பள்ளிவாசலுக்குரிய உரிமைகளை வழங்குவது மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் போதனைகளின்படி செயல்படுவதற்கும் வழங்கப்பட்ட அறிவுரைகள்**

**நம்முடைய ஜமாஅத்திற்குக் குறிப்பாக இறையச்சத்தின் தேவை உள்ளது. குறிப்பாக, இறைவன் புறமிருந்து வந்தவராக வாதம் புரியும் ஒருவருடன் தொடர்பு வைத்துள்ளதாக அவர்கள் கருதுகின்றனர். இந்த சிந்தனையின் காரணமாகவும் அதற்கான தேவை உள்ளது. அப்போது தான் எவ்வகையிலான வக்கிரம், காழ்ப்புணர்ச்சி அல்லது இணைவைத்தலில் மூழ்கியிருந்தாலும் சரி அல்லது எத்தகைய உலகப் புழுக்களாக இருந்தாலும் சரி அந்த அனைத்து பேராபத்துகளில் இருந்தும் அவர்கள் ஈடேற்றம் அடையக் கூடும் - ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை)**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **சீயோன், USAவிலுள்ள ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசலில் 30 செப்டம்பர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு தபூக் மாதம் **30ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

இன்று நீங்கள் சீயோன் பள்ளிவாசல் திறப்புக்காக இங்கு ஒன்றுகூடியுள்ளீர்கள். அல்லாஹ் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அமெரிக்காவிற்கு இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான, அதுவும் ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு சிறப்பு முக்கியத்துவம் பெற்றுள்ள இந்த நகரத்தில் கட்டுவதற்கான நல்வாய்ப்பு வழங்கியுள்ளான்.

இரண்டு நாட்களுக்கு முன்னால், ஒரு பத்திரிகை நிருபர் என்னிடம், ஏன் இங்கு பள்ளிவாசல் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? எனக் கேட்டார். எல்லாப் பள்ளிவாசல்களுமே நமக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். எனவே எல்லா பள்ளிவாசல்களுமே எங்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும் என்பதையே நான் அவரிடம் கூறினேன்.

நான் குறிப்பாக, இந்த பள்ளிவாசலுக்காக மட்டுமே இங்கு வந்துள்ளதாக அவர் எண்ணியிருந்தார். நான் முன்னரும் பள்ளிவாசல்களைத் திறப்பதற்காக வந்து சென்றுள்ளேன் என்று கூறினேன். எவ்வாறு இருப்பினும், இந்தப் பள்ளிவாசலுக்கு இன்னொரு முக்கியத்துவமும் உள்ளது என்று நான் அவரிடம் கூறினேன்.

அது என்னவென்றால், இஸ்லாத்தின் ஓர் எதிரியால் உருவாக்கப்பட்ட இந்த நகரத்தில் இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. வரலாற்றில் ஆர்வம் இருப்பவர்கள் இந்த வரலாற்றை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்வார்கள். ஜமாஅத்தைத் தவிர, வேறு யாருக்கும் இந்த நகரத்தின் வரலாறும் தெரியாது: டூயியையும் தெரியாது என்பதனால் இந்த வரலாற்றைக் கூறுவதற்காக ஜமாஅத் ஒரு கண்காட்சிக்கான ஏற்பாடும் செய்துள்ளது. அதன் மூலம், ஜமாஅத் உடைய பார்வையில் இந்த நகரத்துக்கு இருக்கும் முக்கியத்துவத்தின் இந்த வரலாற்றின் மீது ஒளிபாய்ச்சப்படுகிறது.

ஆர்வம் இருப்பவர்கள் இந்தக் கண்காட்சியிலிருந்து ஓரளவு பயன் பெறவும் முடியும். விரும்பினால், இது தொடர்பாக நாளை ஒரு கட்டுரையும் எழுதலாம். எவ்வாறு இருப்பினும், நான் கூறியதுபோன்று இந்த நகரத்திற்குள்ள வரலாற்று ரீதியிலான முக்கியத்துவம் ஒரு பெயர்தாங்கி வாதம் புரிந்தவன், அவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் குறித்து தவறான சொற்களைப் பயன்படுத்துதல், பிறகு அவன் அழிந்து போதல் மற்றும் இந்த நகரத்தில் ஜமாஅத் உருவாகுதல் ஆகியவை ஒவ்வோர் அஹ்மதியையும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவராக ஆக்குகிறது: ஆக்கவும் வேண்டும்.

அதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப நாம் இந்த நகரத்து மக்களுக்கும் நன்றி செலுத்துகிறோம். ஆரம்பத்தில், கவுன்ஸில் பள்ளிவாசல் கட்டுவதை எதிர்த்து, கட்டுமானத்திற்கு (அனுமதி) மறுத்துவிட்டபோதிலும் கூட மக்கள் நமக்கு ஆதரவாக நின்றார்கள். மேலும், நமக்குப் பள்ளிவாசல் கட்ட அனுமதி வழங்குமாறு கவுன்ஸிலை நிர்பந்தித்தார்கள்.

ஆக, மக்களுக்கு நன்றி செலுத்தாதவர் அல்லாஹ்வுக்கும் நன்றி செலுத்துவதில்லை என்பது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனையே ஆகும். எனவே, இந்தக் கட்டளையின் கீழ், நமக்கு இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கு நல்வாய்ப்பு வழங்கிய அந்த மகத்துவ மிக்க இறைவனுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

எனவே, இந்த வகையில், அஹ்மதிகளாகிய நமக்கு வெறும் ஒரு மகிழ்ச்சிக்கான நாள் மட்டும் இல்லை. அதையும் தாண்டி, மிக அதிகமாக நன்றி செலுத்துவதற்கான நாளுமாகும். அது நமக்கு அந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கான நாளைக் காட்டியுள்ளது. நமக்கு பள்ளிவாசலைக் கட்டுவதுடன் சேர்த்து காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் உண்மையான உயிருள்ள அடையாளத்தையும் அது காட்டியுள்ளது.

வரலாற்று பக்கங்களிலிருந்தும், அந்தக் காலத்தின் வரலாற்றிலிருந்தும், நான் சில விஷயங்களைக் எடுத்துக் கூறுவேன். அதன் மூலம் இதன் முக்கியத்துவம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் மக்கள் அதை ஏற்றுக் கொண்டது ஆகியவைத் தெரிய வருகின்றன. நாம் எவ்வளவு நன்றி செலுத்துபவர்களாக ஆவோமா அல்லாஹ் நமக்கு தனது அவ்வளவு அருட்களை வழங்கிக் கொண்டே செல்வான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தின் அடையாளம் நம் முன் திறந்து கொண்டே செல்லும்.

ஆக, நமது இந்த நன்றி செலுத்தும் நிலையே நம்மை அந்த அடையாளங்களின் உண்மைக்குச் சாட்சிகளாக்கும். நிச்சயமாக, அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம், அன்னாருக்கு ஜமாஅத்தின் முன்னேற்றங்களை காட்டுவான் என்று ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான எண்ணற்ற வாக்குறுதிகளை அளித்திருக்கின்றான் தான். (முன்னேற்றங்களைக்) காட்டினான். காட்டிக் கொண்டிருக்கின்றான். மேலும், இனியும் காட்டுவான்.

ஆனால், நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும், அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்களாகவும் அதற்கான உரிமையை செலுத்துபவர்களாகவும் ஆகும்போதுதான் நாம் அந்த முன்னேற்றங்களை காண்பதற்கும்

அவற்றில் பங்கு வகிப்பதற்கும் உரிமையுடையவர்கள் ஆக முடியும். நாம் நமது வாழ்வில் எண்ணற்ற வாக்குறுதிகள் நிறைவேறக் கண்டுள்ளோம். அல்லாஹ் அதற்கான நேரத்தில் ஒவ்வொரு வாக்குறுதியையும் நிறைவேற்றுவதற்கான காட்சியைக் காட்டுகிறான்.

இன்றிலிருந்து 120 ஆண்டுகளுக்கு முன்பு, எந்தப் பொய் வாதியின் இஸ்லாத்தின் எதிரியின் அழிவிற்கான முன்னறிவிப்பை அல்லாஹ்விடமிருந்து செய்தியைப் பெற்று அன்னார் செய்தார்களோ, இன்று அந்த மனிதனின் நகரத்தில் எ(ந்த நகரத்)தைக் குறித்து, எந்த முஸ்லிமும், தான் கிறிஸ்தவர் ஆகாத வரை அதில் நுழைய முடியாது என்று அவன் அறிவித்திருந்தானோ அங்கு அல்லாஹ் பள்ளிவாசல் கட்டுவதற்கான நல்வாய்ப்பபை ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். இவை வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கான காட்சி இல்லை என்றால், வேறு என்ன? ஆக, இவைதான் அல்லாஹ்வின் பணிகள் ஆகும்.

பல நூறு கோடிகளுக்கு அதிபதியாக இருந்தவனை, பௌதீக கண்ணியமும், மேன்மையும் பெற்றிருந்தவனை அல்லாஹ் பொய்யனாக்கிவிட்டான்: அழிந்துவிட்டான்: பஞ்சாபின் ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வந்த, தன் புறமிருந்து அனுப்பப்பட்டவர், இஸ்லாத்தின் மறுமலர்ச்சி குறித்து செய்த அந்த வாதம் உலகின் 220 நாடுகளில் ஒலிப்பதற்கான ஏற்பாட்டையும் செய்துவிட்டான். ஆனால், நமது பணி முடிவடைந்து விடுகிறதா? அமெரிக்காவின் ஒரு சிறிய நகரத்தில் நாம் பள்ளிவாசல் கட்டிவிட்டோம்: ஜமாஅத்திற்கு முன்னேற்றம் கிடைத்துவிட்டது என்ற விஷயம் மட்டுமே போதுமானதா? இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்காகவோ அல்லாஹ் முழு உலகத்தையும் செயல் களமாக ஆக்கியுள்ளான். நாமோ சிறிய நகரம், பெரிய நகரம் மற்றும் நாடுகளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது அடிமைத்துவத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்.

நாம் நமது வழிவகைகளைப் பார்த்தோமேயானால், இது பெரிய, விசாலமான பணியாகத் தென்படுகிறது. ஆனால், இவ்வாறெல்லாம் இருந்தும் கூட, அல்லாஹ் இந்தப் பணியை நமது பொறுப்பில் ஒப்படைத்துள்ளான். இதுவும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதியாகும். ஆனால், அன்னார் (அலை) அவர்கள் கூறினார்கள்:

செய்யப்படும் இந்த பணிகள் அனைத்தும் நமது அற்பமான முயற்சிகள் ஆகும். உண்மையில், அத்துடன் துஆக்களின் தேவை இருக்கிறது. துஆக்கள் மூலமாக இநதப் பணிகள் நடைபெறும். எனவே, நாம் துஆக்களின் பால் கவனம் செலுத்த வேண்டும் என்ற இந்த முக்கியமான விஷயத்தை எப்போதும் கண் முன் நிறுத்தவேண்டும். பள்ளிவசால்களும் கூட, அதில் மக்கள் இபாதத் செய்ய ஒன்று கூடுவதற்காகவே, ஐவேளை அல்லாஹ்வுக்கு முன் ஆஜராவதற்காகவே மேலும், ஜுமுஆக்களை முறையாகப் பேண வேண்டும் என்பதற்காகவே கட்டப்படுகின்றன.

உலகக் கேளிக்கைகளிலும், உலகப் பணிகளிலும் உங்களது இறைவணக்கத்தை மறந்துவிடாதீர்கள். நாம் நமது இறைவணக்கத்தை மறந்துவிட்டால் இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதென்பது வெறும் வெளிப்படையான கட்டடத்தை நிலை நிறுத்துவதாகிவிடும். நாம் இங்கு முஸ்லிம்களின் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுவிட்டது என்று உலகத்திற்கு கூறுபவர்களாக இருப்போம். ஆனால், நாம் இந்தப் பள்ளிவாசலின் அருளிலிருந்து பலன் பெறுபவர்களாக ஆகும் அளவுக்கு அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உதவியாளர்களைச் சேர்ந்தவர்களாக ஆகும் அளவுக்கு நமது செயல்கள் அல்லாஹ்வின் பார்வையில் தகுதி பெற்றவையாக இருக்காது:

அன்னார் (அலை) இவ்வாறு கூறியிருக்கின்றார்கள்: தொடர்ச்சியாக துஆக்கள் செய்வதன் மூலமாக எனது உதவியாளர்களாக ஆகுங்கள். அப்போது தான் நாம் அல்லாஹ்வின் அருள்கள் வேகவேகமாக நிறைவேறக் காண்போம்.

எனவே, இன்று நம்மில் ஒவ்வொருவரின் பணி என்னவென்றால் நாம் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களுக்காக நமது இபாதத்களை நமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைப்படி நமது தொழுகைகளை நிறுத்தி நிதானமாகத் தொழவேண்டும். கலப்பற்றவர்களாக ஆகி அல்லாஹ்வுக்கு முன் குனியவேண்டும். அவனிடம் மேற்கொண்டு வெற்றிகள் கிடைப்பதற்கு யாசிக்க வேண்டும்.

நம்மில் இவை அனைத்தும் கிடைத்து விடுபவர்கள், பிறகு தாம் அல்லாஹ்வின் அருள்மழைப் பொழிவதைக் காண்பவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாக இருப்பார்கள். நாம் நமது இபாதத்களின் தரத்தை உயர்த்துவோமேயானால், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்போமேயானால் பிறகு, அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்துள்ள அந்த வாக்குறுதிகளை நம் வாழ்நாளிலேயே நிறைவேறக் காண்போம். எனவே, நாம் நமது நிலைமைகள் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. இந்த முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு வந்து உலகத்தில் மூழ்கிவிடக் கூடாது.

இப்போது கடந்த சில காலமாக அடைக்கலம் தேடும் சில புதிய மக்களும் இங்கு வந்துள்ளனர். எனவே, உலகில் மூழ்கிவிடாதீர்கள். இங்கு கட்டப்படும் ஒவ்வொரு பள்ளிவாசலும் ஒரு புதிய உத்வேகம், புத்துணர்ச்சி மற்றும் அல்லாஹ்வுடனான தொடர்பை நம்முள்ள உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அல்லாஹ்வோ தனது வாக்குறுதிகளை நிறைவேற்றிய தீருவான். ஆனால், நமது செயல்களின் காரணமாக அவை நிறைவேறுவதற்கான காலம் தள்ளிப் போய்விடக் கூடாது. அல்லது பின்னால் வரக்கூடிய வேறுயார் மூலமாகவோ அவை நிறைவேறி நாம் இழப்பிற்குரியவர்களாக இருந்து விடக்கூடாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கோ அல்லாஹ் இஸ்லாத்தின் வெற்றிக்கான வாக்குறுதியளித்திருந்தான். அல்லாஹ்வுக்குப் பெருமானார் (ஸல்) அவர்களை விட அன்பிற்குரிய நபியாக யார் இருந்திருக்க முடியும்? யார் இருக்கின்றார? ஆனால், அவ்வாறு இருந்தும், பத்ர் போரின்போது, அன்னார் (ஸல்) அவர்களின் உருக்கமான மன்றாடல், பணிவு, அச்சம், பயம் மற்றும் துஆ ஆகியவை ஒரு மாபெரும் தரத்தை எட்டியிருக்கவில்லையா?

எந்தஅளவு உருக்கமான மன்றாடல் இருந்தது என்றால், மீண்டும் மீண்டும் தோளில் இருந்து போர்வை இறங்கிக் கொண்டே இருந்தது. பின்னர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, அல்லாஹ் வெற்றி மற்றும் உதவிக்கான வாக்குறுதி அளித்துள்ளான் எனும்போது, தாங்கள் இந்த மன உளைச்சலை ஏன் ஏற்படுத்திக் கொள்கிறீர்கள்? என்று கேட்டார்கள்.

பிறகு, எதிரி மீண்டும் மீண்டும் தாக்குதல் தொடுத்தபோதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீண்டும், மீண்டும் தாக்குதல் நடத்தியபோதும் எல்லா வகையிலும் இழப்பை ஏற்படுத்தியபோதும் சில ஆண்டுகளுக்குப் பிறகே, அல்லாஹ் வெற்றியை வழங்கினான். அதுபோன்ற ஒரு மகத்தான வெற்றியை வரலாறு கண்டதுமில்லை: கேட்டதுமில்லை.

அதாவது, உயிருக்கு எதிரியாக இருந்தவர்கள் முஸ்லிம்கள் ஆனது மட்டுமல்ல: அதற்கும் மேற்பட்டு அன்னாரை நேசிப்பவர்களாக ஆகிவிட்டார்கள். தமது இன்னுயிரை அன்னாருக்காக அர்ப்பணிப்பதற்கான செயல் வடிவம் ஆகத் திகழ்ந்தார்கள். எங்களுடைய பிணாங்களைத் தாண்டிச் செல்லாமல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரை எந்த எதிரியும் சென்றடைய முடியாது என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். எவர்களின் பங்கில் இழிவும், அவமானமும் எழுதப்பட்டிருந்ததோ அவர்களை அல்லாஹ் அழித்து நாசமாக்கிவிட்டான்.

ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவனுக்காக மாய்ந்துபோன அந்த நபரின் துஆக்கள் தான் இந்தப் புரட்சியை ஏற்படுத்தின. ஆ

ஆக, இன்றும் இறைவனுக்காக மாய்ந்துபோன அந்த நபரின் உண்மை பேரன்பரின் துஆக்களே, அவற்றிற்கான

நேரத்தில் நிறைவேறி உலகை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலடிகளின் கீழ் கொண்டு வரும்.

ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

என்னைச் சேர்ந்தவர்களாகக் கருதிக் கொள்ளும் நீங்கள் உங்களுடைய துஆக்கள் மற்றும் உங்களுடைய செயல்கள் மூலமாக எனக்கு உதவி செய்யுங்கள்.

இன்று நாம் இந்த பள்ளிவாசலில் அமர்ந்திருக்கின்றோம். இதைத் துவக்கி வைத்துக் கொண்டிருக்கின்றோம். இதற்குப் பெயரும் கூட ஃபத்ஹே அஸீம் மஸ்ஜிது (மாபெரும் வெற்றி பள்ளிவாசல்) என்று வைத்துள்ளோம். இந்தப் பெயர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம்கள் மற்றும் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப வைக்கப்பட்டுள்ளது.

ஹுஸூர் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று டூயியின் அழிவிற்கான முன்னறிவிப்பை செய்தார்கள். அன்னார், மாபெரும் வெற்றி ஏற்படும் இந்த அடையாளம் விரைவில் வெளிப்படும் என்றும் கூறினார்கள்.

15, 20 நாட்களுக்குள்ளேயே அல்லாஹ் அவனை அழித்துவிட்டான் என்பதை உலகம் பார்த்தது. மிகவும் இழிவுடன் அழித்து விட்டான். அதற்கு முன் அல்லாஹ் அவனுடன் எப்படி நடந்து கொண்டான் என்பது ஒரு தனி விளக்கமாகும். எவ்வாறிருப்பினும், அவனது அழிவிற்கான அடையாளத்தை அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று ஹுஸூர் (அலை) அவர்கள் மகத்தான வெற்றியாகக் கூறினார்கள். மேலும், இன்று அதன் அடுத்த அடி எடுத்து வைக்கப்படுகிறது. அது, இந்த நகரத்தில் நாம் பள்ளிவாசலைத் திறப்பதாகும்.

ஹுஸூர் (அலை) அவர்களின் இல்ஹாமின் ஒரு பங்கை நாம் ஏறத்தாழ 115 ஆண்டுகள் முன் நிறைவேறக் கண்டோம். நாம் அதன் அடுத்தக் கட்டம் இன்று நிறைவேறக் காண்கிறோம். 115 ஆண்டுகளுக்கு முன், உலகப் பத்திரிகைகளான அந்தக் காலத்துப் பத்திரிகைகள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய சவாலுக்குத் தமது பத்திரிகைகளில் இடமளித்தன. பிறகு, அவனது அழிவிற்கான செய்தியையும் தெரிவித்தன.

ஆக, இது இறைவனின் அடையாளமாக இருந்தது. அதை உலகம் ஏற்றுக் கொண்டது. ஒரு பத்திரிகையின் சில பகுதிகளை நான் இங்கு குறிப்பிட்டு விடுகிறேன். அதிகம் எடுத்துரைக்க முடியாது.

1907 ஆம் ஆண்டு ஜூன் 23 தேதியின் The Sunday Herald Boston எனும் பத்திரிகை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அறிமுகத்தை எழுதியது. பிறகு, அன்னாரது வாதம் மற்றும் சவாலை எழுதியது. பிறகு, டூயியைப் பற்றி எழுதியுள்ளது. அந்தப் பத்திரிகையின் சில சொற்களிலேயே நான் எடுத்து வைக்கின்றேன்:

அது கூறுகிறது. அது இவ்வாறு தலைப்பு எழுதியுள்ளது: மஸீஹ் ஆன மிர்ஸா குலாம் அஹ்மது மகத்தானவர் ஆவார். அன்னார் டூயியின் படிப்பினை தரும் மரணத்திற்கான முன்னறிவிப்பு செய்தார்கள்.

மேலும், இப்போது அன்னார் பிளேக் நோய், வெள்ளம் மற்றும் நிலநடுக்கம் ஆகியவற்றிற்கான முன்னறிவிப்பு செய்கிறார்கள்.

அந்தப் பத்திரிகை கூறுகிறது: ஆகஸ்ட் மாதத்தின் 23 நாட்கள் கடந்திருந்த நிலையில், இந்தியாவின் காதியானைச் சேர்ந்த மிர்ஸா குலாம் அஹ்மது அவர்கள் ஏலியாவின் இரண்டாவது வருகையாக அழைக்கப்பட்டு வந்த அலெக்சாண்டர் டூயி உடைய மரணத்தைப் பற்றி முன்னறிவிப்பு செய்தார்கள். அது கடந்த மார்ச் மாதம் நிறைவேறியது.

பிறகு, அந்த(ப்பத்திரிகை) கூறுகிறது: இந்த இந்திய மனிதர் உலகின் கிழக்கத்திய பகுதிகளில் பல ஆண்டுகளாகப் புகழ்பெற்றிருக்கிறார். இறுதிக் காலத்தில் தோன்றவிருந்த அந்த உண்மை மஸீஹ் தாமே என்பது அவரது வாதம் ஆகும். இறைவன் அவருக்கு கண்ணியம் அளித்தான்.

அமெரிக்காவில் முதல் முறை இது பற்றி 1903-இல் பேசப்பட்டது. அப்போது, மூன்றாம் ஏலியாவுடனான இந்த சச்சரவு பொது பார்வைக்கு வந்தது. டூயி மரணித்தப் பிறகு, இந்திய நபி புகழின் உச்சியை எட்டினார். ஏனெனில், அவர் டூயியின் மரணத்தைப் பற்றி, அவரது அதாவது,ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிப் (அலை) அவர்களின் வாழ்விலேயே மிக அதிகமான துன்பத்துடனும், வேதனையுடனும் அவனது மரணம் நிகழும் என்று கூறியிருந்தார்.

பிறகு (பத்திரிகை) எழுதுகிறது:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தரப்பு கூற்றாக எழுதுகிறது:

மிஸ்டர் டூயீ இந்தப் போட்டியை விட்டு ஓடிவிட்டால், பாருங்கள் இன்று முழு அமெரிக்காவையும் நான் இந்த விஷயத்துக்கு சாட்சியாக முன் நிறுத்தினேன். அவருடைய இந்த வழிமுறையும் கூட, தோல்வியின் வடிவமாகவே ஏற்றுக் கொள்ளப்படும். மேலும், இந்த சூழ்நிலையில் அவர் ஏலியா ஆவதற்காக செய்த வாதங்கள் அனைத்தும் வெறும் நாவின் சூழ்ச்சியும், ஏமாற்றமும் ஆகும் என பொது மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆக, இவ்வாறு அவர் மரணத்தை விட்டு தப்பி ஓட விரும்புவார். ஆனால், உண்மையில் இத்தகைய பெரும் போட்டியிலிருந்து நழுவுவதும் ஒரு மரணமே ஆகும்.

ஆக, உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள். அவரது சீயோனின் மீது விரைவாக ஒரு பேரழிவு ஏற்படவிருக்கிறது. ஏனெனில், இந்த இரண்டு சூழ்நிலையில் ஒரு சூழ்நிலை நிச்சயம் அவரைப் பிடித்துக் கொள்ளும். இப்போது இந்தக் கருத்தை துஆவுடன் நிறைவு செய்கிறேன்:

வல்லமை படைத்த முழுமையான இறைவா, எப்போதும் நபிமார்களுக்கு வெளிப்பட்டு வந்தவனே, இனியும் வெளிப்படப் போகிறவனே இந்தத் தீர்ப்பை விரைவாக அளிப்பாயாக பிகட் மற்றும் டூயி உடைய பொய்யை மக்கள் மீது வெளிப்படுத்தி விடுவாயாக ஏனெனில், இந்தக் காலத்தில் உன்னுடைய இயலாத அடியார்கள் தம்மைப் போன்ற மனிதனை வணங்குவதில் மூழ்கி உன்னை விட்டு வெகு தொலைவில் சென்று கிடக்கிறார்கள்.

பிறகு, பத்திரிகை எழுதுகிறது: ஆரம்பத்தில் தொலைதூர கிழக்கிலிருந்து செய்யப்பட்ட இந்த சவாலில் டூயி எந்தப் பொதுவான கவனமும் செலுத்தவில்லை. ஆனால், செப்டம்பர் 26, 1903 அன்று அவர் தனது Zion City Publication-இல் இவ்வாறு கூறியுள்ளார்:

சிலவேளை மக்கள் என்னிடம், நீங்கள் ஏன் இதுபோன்ற விஷயங்களுக்கு பதில் அளிப்பதில்லை? என்று கேட்கிறார்கள்.

அவன் கூறுகின்றான்: நான் இந்த ஈக்களுக்கும், கொசுக்களுக்கும் பதில் அளிக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? நான் இவற்றின் மீது எனது பாதங்களை வைத்தால், இவற்றை நசுக்கி விடுவேன். நான் இவற்றிற்குப் பறந்து போய் உயிர் வாழ சந்தர்ப்பம் கொடுக்கின்றேன்.

ஒரே ஒரு முறை மட்டும் தனக்கு ஏதோ ஒரு வகையில் தனக்கு மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களைப் பற்றித் தெரியும் என்பதை அவன் வெளிப்படுத்தியிருக்கின்றான். அவன் மிர்ஸா ஸாஹிப் அவர்களைப் பற்றி முட்டாள், முஹம்மதிய்ய மஸீஹ் என்று கூறியுள்ளான். நவூதுபில்லாஹ்

மேலும், டிசம்பர் 12, 1903-ல் அவன் இவ்வாறு எழுதுகின்றான்:

நான் இறைவனின் நபி இல்லை என்றால், இறைவனுடைய பூமியில் வேறெவருமே (நபி) இல்லை.

ஜனவரியில் அவன் எழுதுகின்றான்: மக்களைக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் இருந்து வெளியே கொண்டு வந்து அவர்களை சீயோன் நகரத்திலும் பிற நகரத்திலும் குடியமர்த்துவது எனது பணியாகும். முஸ்லிம்கள் முடிவடைந்துவிடாத வரை நான் அதை செய்ய வேண்டும். இறைவன் நமக்கு அந்தக் காலத்தை காட்டுவானாக.

இவ்வாறு டூயி எழுதியுள்ளான்.

ஆனால், மிர்ஸா ஸாஹிப் அவர்களோ அவனுக்குக் கடுமையான சவால் விடுத்தார்கள்.

டூயி எந்த நிலையில் மரணித்தான் என்றால், அவனது நண்பர்கள் அவனை விட்டுச் செல்ல ஆரம்பித்தனர். அவனது பாக்கியம் சீர்கெட்டது. அவன் பக்க வாதம் மற்றும் புத்திபேதலித்தல் போன்ற நோய்களில் சிக்கிவிட்டான். அவனுக்குப் படிப்பினைக்குரிய மரணம் ஏற்பட்டது. அவனுடன் சேர்ந்து சீயோன் நகரம் உட்புறக் கருத்து வேறுபாடுகளால் அழிந்து நாசமானது.

மிர்ஸா சாஹிப் முன் வந்தார்கள். அவர்கள் சவாலில் அல்லது முன்னறிவிப்பில் வென்றுவிட்டார்கள் என்று தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் உண்மையைத் தேடும் ஒவ்வொருவருக்கும் உண்மையின்பால் அழைப்பு விடுக்கிறார்கள். இவ்வாறே அன்னார் (அலை) அறிவித்திருக்கின்றார்கள். அன்னாரது அமெரிக்க எதிரிக்கு ஏற்பட்ட இந்தப் பேரழிவை அவர்கள் இறைவனது தண்டனை என்பதுடன் சேர்த்து இறைவனின் நீதிக்கு ஆதரமாக முன்வைக்கின்றார்கள். இது குறித்து ஒரு சீடர் கூறுகிறார். அதாவது, ஓர் அஹ்மதி கூறுகிறார்:

நாம் டூயியின் வாழ்வின் சில குறிப்பிட்ட நிலைமைகளைச் சுட்டிக் காட்டி எதிரி மரணிப்பதைக் கொண்டாடக் கூடாது. இதுபோன்ற விஷயங்கள் எங்களது சிந்தனைக்கு மிகவும் அப்பாற்பட்டவை. நாங்கள் இந்த உண்மைகளை எங்களது நோக்கத்திற்காகவும் மேற்கொண்டு உண்மை வெளிப்படுவதற்காகவும் வெளியிடுகிறோம்.

தூய இஸ்லாம் மார்க்கம் மரணித்தவர்களைப் பழித்துரைப்பதற்குப் போதிக்கவில்லை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், அந்த உண்மைகளை வெளிப்படுத்துவது சமூகத்தின் உரிமைக்காகவும் மனிதத்தின் உரிமைக்காகவும், இவைனுக்காகவும் இருந்தால், அந்த நேரத்திலும் அந்த உண்மைகளை மறைக்க வேண்டும் என்பது அதற்குப் பொருள் அல்ல.

பிறகு, ஓர் அஹ்மதியின் கூற்றையே (பத்திரிகை) இவ்வாறு எழுதுகிறது:

டூயி மீது துன்பங்களை இறக்கி கடைசியில் அவனது அகால மரணத்தின் காரணமாக, துயரத்தையும் தண்டனையையும் இறக்கி இறைவன் தனது தீர்ப்பைக் கூறிவிட்டான். இந்த சம்பவம் நிகழ்வதற்கு மூன்று, நான்கு ஆண்டுகள் முன்பே அவன் தனது தூதருக்கு இது குறித்து தெரியப்படுத்திவிட்டான். (SUNDAY HERALD-BOSTON JUNE 23, 1907, MAGAZINE SECTION)

இது ஒரு பத்திரிகையின் மாதிரியாகும். இதை அவர்கள் முன்வைத்துள்ளார்கள். நிச்சயமாக, இது வெற்றியாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைக்கு ஆதரவாகவும் இருந்தது: இருக்கிறது. ஆனால், நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஹுஸுர் (அலை) அவர்கள் மேற்கொண்ட பணி மிகவும் விசாலமானது. இதுவோ ஒரு போர்க்களத்தின் ஓரிடத்தின் வெற்றியைப் பற்றிய குறிப்பாகும்.

நாம் உலகத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலடியின் கீழ் கொண்டு வரும்போது தான் நம்முடைய உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். அதற்காக நாம் இப்போது இந்தப் பள்ளிவாசல் கட்டுமானத்துடன் தப்லீஃக்குக்கான புதிய வழிகளைத் தேட வேண்டும். முஹம்மதிய மஸீஹின் ஆதாரங்களை உலகத்திற்கு முன்னால் எடுத்து வைக்க வேண்டும். முன்னரை விட அதிகம் நமது செயல் நிலையையும் ஆன்மீக நிலையையும் மேம்படுத்த வேண்டும்.

நான் கூறியதுபோன்று, உண்மையான மகத்தான வெற்றியோ மக்கா வெற்றியாக இருந்தது. மக்கா வெற்றிக்குப் பிறகு ,ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ, நேர்வழிபெற்ற கலீஃபாக்களோ அல்லது பின்னால் வந்த முஸ்லிம்களோ தப்லீஃக் பணியை நிறுத்திவிட்டார்களா? இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் எல்லைவரை எட்ட வைப்பதற்கான முழு முயற்சி மேற்கொள்ளப்படவில்லையா? போர்களால் பகுதிகள் வெற்றி காணப்படவில்லையா?

ஆமாம், போர்களும் நடந்தனதான்: ஆனால், மார்க்கம் பரவுவதற்காக அல்ல. மாறாக, அவர்கள் உள்ளங்களை வென்றார்கள். அதனால், தியாகம் செய்யக் கூடிய மக்கள் கூட்டங்கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்து கொண்டே சென்றார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மூலமாகக் கிடைக்கப் பெற்ற வெற்றியை நிரந்தர தப்லீஃக் மற்றும் துஆக்களால் என்றென்றைக்குமாக ஆக்க வேண்டிய தேவை இருக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட மக்கள் முன்னவர்களோடு சென்று இணைந்த பின்னவர்களில் எண்ணப்படுகிறார்கள். முன்னவர்கள் தப்லீஃக் செய்வதை நிறுத்தினார்களா? தமது ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலையை மேம்படுத்துவதை நிறுத்தினார்களா? இபாதத்களின் தரத்தைக் குறைத்தார்களா? முஸ்லிம்களிடம் இந்த விஷயம் இருந்தவரை இஸ்லாம் முன்னேற்றம் அடைந்து வருகிறது. உலகம் அவர்கள் மீது மேலோங்கியபோது, இறையச்சத்தின் தரம் சரிய ஆரம்பித்தபோது இபாதத்களின்பால் கவனம் குறைந்து கொண்டே சென்றபோதுதான் முஸ்லிம்களுக்கு வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்தது.

ஆனால், அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, கியாமத் வரை அவன் இந்த மார்க்கத்தை நிலைபெறச் செய்வான் என்றும், அதற்கு உறுதிப்பாட்டை வழங்குவான் என்றும், அதற்காக இறுதி காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியை அனுப்புவான் என்றும் வாக்குறுதி அளித்திருந்தான். பிறகு, வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்பினான். அன்னார் உலகிற்கு தமது வருகையைத் தெரியப்படுத்தினார்கள்.

வழிவகைகள் இல்லாதபோதும், ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் உலகின் பல நாடுகளில் அன்னாருடைய தூதுச் செய்தி சென்றடைந்தது. எந்த அளவுக்கு மேன்மையான முறையில் சென்றடைந்தது என்று, டூயி சம்பந்தமாக நாம் பார்க்கவே செய்கிறோம்.

அல்லாஹ் அன்னாரின் மூலம் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக விதைத்த விதை ஒரு மேன்மையுடன் உலகில் பரவி பூத்துக் கொண்டே செல்கிறது. அல்லாஹ் அன்னாருக்கு எண்ணற்ற வாக்குறுதிகளை வழங்கியுள்ளான். அன்னாருக்கு இல்ஹாம் மூலம் இவ்வாறு கூறினான்:

இறைவன் உம்மைக் கைவிடப்போவதில்லை. இறைவன் உமக்கு அசாதரணமான கண்ணியத்தை வழங்குவான். மக்கள் உம்மைக் காப்பாற்றப் போவதில்லை. ஆனால், நான் உம்மைக் காப்பாற்றுவேன். இது போன்ற எண்ணற்ற வாக்குறுதிகளை அல்லாஹ் அன்னாருக்கு அளித்துள்ளான். அல்லாஹ் எவ்வாறு தன்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டே செல்கிறான் என்பதற்கு ஜமாஅத்தின் 133 வருட வரலாறு சான்று பகர்கிறது.

இன்று ஜமாஅத் உலகில் 220 நாடுகளில் பரவியுள்ளது. இது அல்லாஹ்வின் செயலாகும். அவன் இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். உலகம் இன்று மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியாகவும் அறிகிறது. அன்னார் ஒவ்வோர் எதிரியையும் போட்டிக்கு அழைத்தார்கள். எதிரிக்குத் தப்பி ஓடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை அல்லது அல்லாஹ் அவனை அழித்து நாசமாக்கிவிட்டான்.

நபிமார்களுடைய ஜமாஅத்திற்கு எதிர்ப்புகள் இருந்துகொண்டே தான் இருக்கும். ஆனால், எதிரி விரும்புவதை அவனால் பெற முடியாது. இதுவே அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் நடக்கிறது. எல்லா வழிவகைகள் மற்றும் ஆற்றலுடனும் ஜமாஅத்தை அழிப்பதற்கு எதிரி செய்யாத முயற்சிதான் என்ன இருக்கிறது? இப்போதும் செய்து கொண்டே தான் இருக்கிறார்கள். பலவீனமான நம்பிக்கையை உடையவர்கள் இதனால் தடுமாற்றம் அடைகிறார்கள். ஆனால், ஒருவர் சென்றால் ஆயிரக்கணக்கானவர்களை அல்லாஹ் வழங்குகிறான். எனவே, நாம்

கலப்பற்றவர்கள் என்று வாதம் புரிகிறோம் என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் அறிவித்திருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) காதியானி அவர்கள்தான் என்று நாம் அறிவிக்கிறோம் என்றால், பின்னர் நாம் நம்முடைய அனைத்துத் திறமைகளைக் கொண்டு அந்த மஹ்தி மற்றும் மஸீஹ் அவர்களுடைய உதவியாளராக ஆகவேண்டும்.

ஸஹாபா காண்பித்த அந்த முன்மாதிரியைக் காண்பிக்க வேண்டும். நாம் முஸ்லிம்களையும் ஒரே மார்க்கத்தில் ஒன்று திரட்டி அவர்களுக்குள் இருக்கின்ற அனைத்து பித்அத்களையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இஸ்லாத்தின் அழகிய போதனையைத் தெரியப்படுத்தி அவர்களை ஏக இறைவனை வணங்கக் கூடியவர்களாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தரூத் அனுப்பக் கூடியவர்களாகவும் ஆக்க வேண்டும். அப்போதுதான் நம்மால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்தின் உரிமையை செலுத்த முடியும்.

அவ்வாறு இல்லை என்றால், நம்முடைய பைஅத் வாதம் தன்னகத்தே ஒன்றுமற்றதாகும். இதை அடைவதற்கு நாம் நம்முடைய இபாதத்களின் தரத்தை உயர்த்த வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பள்ளிவாசல்கள் கட்டுவது குறிக்கோள் அற்றதாகிவிடும். மேலும், நாம் நம்முடைய வாழ்வின் நோக்கத்தை அறியும்போது தான் இது நடக்க முடியும்.

வாழ்வின் நோக்கம் என்ன? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதன் தன்னுடைய வாழ்வின் நோக்கத்தை சுயமே நிர்ணயிக்க முடியாது. மனிதனைப் படைத்தவன் இறைவனே ஆவான். அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

அதாவது, நான் மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்தேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)அவர்கள் இந்த வசனத்திற்கு எண்ணற்ற இடங்களில் விளக்கம் அளித்துள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) இவ்வாறு விளக்கம் அளிக்கிறார்கள். அன்னார் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மனிதன் படைக்கப்பட்டதற்கான உண்மையான நோக்கம் அவன் தன்னுடைய இறைவனை அறிந்து அவனுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதாகும். இது குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

مَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்தேன். ஆனால், உலகிற்கு வரக் கூடிய பெரும்பாலான மக்கள் இளமைப் பருவத்தை அடைந்த பிறகு, தம்முடைய கடமைகளைப் புரிவதற்குப் பகரமாக, வாழ்வின் நோக்கத்தைக் கருத்தில் கொள்வதற்குப் பகரமாக இறைவனை விட்டுவிட்டு உலகத்தின் பக்கம் குனிந்து விடுகிறார்கள் என்பது வருத்தமான விஷயமாகும்.

அவர்கள் உலக செல்வம் மற்றும் அதனுடைய கண்ணியத்தை எந்த அளவுக்கு விரும்பக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்றால், இறைவனுக்கான பங்கு மிகக் குறைவாகவே ஆகி விடுகிறது. பெரும்பாலான மக்களின் உள்ளங்களிலோ இருப்பதே இல்லை. அவர்கள் உலகிலேயே மூழ்கி அர்ப்பணமாகிவிடுகிறார்கள். இறைவனும் ஒருவன் இருக்கிறான் என்று அவர்கள் அறிவது கூட இல்லை. ஆயினும், மரண நேரம் வரும்போது உயிரைக் கைப்பற்றக் கூடியவர் வந்து உயிரை எடுத்த பிறகு தான் அவர்களுக்கு (உண்மை) தெரிகிறது.

காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளதாக வாதம் புரியும் நாம் இப்படி வாழ்வைக் கழிப்பது நம்முடைய பணியல்ல.

நாமோ இந்த வாழ்வின் நோக்கத்தைக் கண்டறிய முயற்சி செய்தவாறு இபாதத்தின் உரிமையை செலுத்த வேண்டும். அப்போதுதான் இந்த அழகிய பள்ளியின் பக்கம் மக்களின் கவனம் திரும்பும். அப்பொழுதுதான் நம்மால் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உண்மையான முறையில் மேற்கொண்டு எடுத்துச் செல்ல முடியும். அப்போதுதான் நம்மால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேற்கொண்ட பணியை நிறைவேற்ற முடியும்.

நாம் நம்முடைய முயற்சிகளை அல்லாஹ்வின் உதவியால் பெற முயற்சி செய்யும் போதுதான் அது நடைபெற முடியும். நாம் நம்முடைய இபாதத்களின் உரிமையை செலுத்துபவர்களாக ஆகாதவரை அது நடக்க முடியாது. எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இதை சிந்திக்க வேண்டும். அதை தன் வாழ்வின் அங்கமாக ஆக்க முயற்சி செய்ய வேண்டும். அதாவது, அவனை வணங்குவதற்கான உரிமையை செலுத்த வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருட்களை ஈர்த்தவாறு நமது உலகையும், மறுமையையும் சீர்படுத்தக் கூடியர்களாக நாம் ஆகமுடியும்.

எனவே, நாம் நமது வாழ்வின் நோக்கம் என்ன? என்பதன் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்ளும்போது தான், இன்றைய இந்தப் பள்ளித் திறப்பு மகத்துவமிக்கதாக இருக்கும். இல்லையென்றால், உலகில் மிகவும் அழகான மிகவும் உயர்ந்த பள்ளிவாசல்கள் ஏராளமானவை உள்ளன. ஆனால், அங்கு வரக்கூடியவர்கள் தாங்கள் படைக்கப்பட்ட நோக்கத்தை புரிந்து கொண்டவர்களாக இருப்பதில்லை. இபாதத் என்பது ஐந்து தொழுகைக்களை அல்லது சில தொழுகைகளை வேகவேகமாகக் குனிந்து எழுந்து தொழுவது அல்ல. மாறாக, இபாதத் என்னவென்றால், தொழுகைக்கான உரிமையை நிறைவேற்ற வேண்டும். அதை நிறுத்தி நிதானமாகத் தொழவேண்டும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதருக்கு மூன்று, நான்கு முறை மீண்டும் மீண்டும் தொழுமாறு கட்டளையிட்டதற்கான காரணம், அன்னாருடைய பார்வையில் அவர் தொழுகைக்கான உரிமையை நிறைவேற்றவில்லை என்பதே ஆகும். எவ்வாறு அழகிய முறையில் நிறுத்தி நிதானமாகத் தொழ வேண்டுமோ? அவ்வாறு அவர் தொழவில்லை.

எனவே, தொழுகைகளையும் அதற்கான உரிமையை செலுத்திய வண்ணம் நிறைவேற்றுங்கள். பிறகு, அல்லாஹ்வின் நெருக்கமும் நமக்குக் கிடைக்கிறது. இதேபோன்று இறைவனுடைய அடியார்களின் உரிமையையும் செலுத்தும்போது தான் இறை வணக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். எவர்கள் மக்களுடைய உரிமைகளைப் பறிக்கிறார்களோ (அவர்களைக்) குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

அவர்களுடைய தொழுகைகள் அவர்களின் அழிவிற்குக் காரணியாக அமையும். அவை அவர்களின் முகத்தில் எறியப்படும்.

எனவே நம்முடைய நோக்கம் பள்ளிவாசல்களை நிரப்புவதாகும். அல்லாஹ்வின் கட்டளைகள்படி நடந்தவாறு நிரப்புவதாகும். அல்லாஹ்வின் திருப்தியைப்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 27 October - 03 November 2022 Issue No. 43 & 44

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.600/- (Per Issue Rs. 11/-) (WEIGHT - 20-50 gms/issue)

பெறுவதற்காக நிறைவேற்றுவதாகும்; நிறைவேற்றவும் வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சவால் விடுத்த அந்த மனிதன் எதை விரும்பினான்? அவன் மார்க்கத்தின் பெயரில் உலகில் தன்னுடைய ஆட்சியை விரும்பினான். அதற்காக அவன் ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்களுடைய பெயரைப் பயன்படுத்தினான். தான் முஹம்மதிய்ய மஸீஹை இவ்வாறு செய்து விடுவேன்: அவ்வாறு செய்துவிடுவேன் என்று பெரும்,பெரும் வாதங்கள் புரிந்தான். இது குறித்து நான் ஒரு பத்திரிகையின் சான்றை வைத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவனுக்கு துஆவிற்கான சவால் விட்டபோது, பிறகு அவனுடைய முடிவு வெளிப்பட்டு விட்டது. உலகம் எல்லா வகையிலும் டூயி உடைய இழிவு மற்றும் அவமானத்தைக் கண்டது. எந்த அளவிற்குத் தெளிவான அடையாளம் வெளிப்பட்டது என்றால், பத்திரிகைகளும் அதை ஒப்புக் கொண்டன. ஏனென்றால், அதைத் தவிர்த்து வேறு வழியிருக்கவில்லை.

மேலும், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை மகத்துவமானவர் என்று கூறும் நிர்பந்தத்திற்கு ஆளானார்கள். ஆனால், அந்த மகத்துவமான வெற்றியின் மகிழ்ச்சியில் நாம் நினைவுச் சின்னமாக ஒரு பள்ளிவாசலைக் கட்டிவிட்டு மகிழ்ச்சி அடைய வேண்டுமா?

நான் கூறியதுபோன்று, நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களின் கனிகளை உண்டோம்: ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தம்மைப் பின்பற்றக் கூடியவர்களிடமும் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கான வழிகளாகிய அந்தப் பாதையிலேயே நடக்குமாறு வலியுறுத்தியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவனை அழிப்பதற்கான சவாலை மட்டும் விடவில்லை. அதற்கும் மேற்பட்டு, இஸ்லாத்தின் மகத்துவத்தை நிலைபெறச் செய்வதற்காக சவால்விட்டார்கள். உலகை இஸ்லாத்தின் கொடியின் கீழ் கொண்டுவருவதற்காக சவால்விட்டார்கள். எவர் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் கொடியை உயர்த்தியவாறு ஏக இறைவனின் ஆட்சியை உலகில் நிலைபெறச் செய்ய வேண்டுமோ அந்த முஹம்மதிய்ய மஸீஹின் ஆட்சி இப்போது உலகில் நிலைபெற வேண்டும் என்பதற்காக சவால்விட்டார்கள்.

எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்துள்ளோம் என்று வாதம் புரிகின்ற நம்முடைய பணி, முஹம்மதிய்ய மஸீஹின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரப்புவதேயாகும். இறைவனின் ஏகத்துவத்தை அவர்களுக்கு நிரூபிக்க வேண்டும். நாம் இறைவனுடன் நம்முடைய தொடர்பையும் ஏற்படுத்தும்போது தான்: இறையச்சத்தில் முன்னேறும் போதுதான் இது நடக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நம்முடைய ஜமாஅத்திற்குக் குறிப்பாக இறையச்சத்தின் தேவை உள்ளது. குறிப்பாக, இறைவன் புறமிருந்து வந்தவராக வாதம் புரியும் ஒருவருடன் தொடர்பு வைத்துள்ளதாக அவர்கள் கருதுகின்றனர். இந்த சிந்தனையின் காரணமாகவும் அதற்கான தேவை உள்ளது. அப்போது தான் எவ்வகையிலான வக்கிரம், காழ்ப்புணர்ச்சி அல்லது இணைவைத்தலில் மூழ்கியிருந்தாலும் சரி அல்லது எத்தகைய உலகப் புழுக்களாக இருந்தாலும் சரி அந்த அனைத்து பேராபத்துகளில் இருந்தும் அவர்கள் ஈடேற்றம் அடையக் கூடும்.

எனவே, நம்முடைய அகத் தூய்மையும் மிகவும் அவசியமாகும். இந்த அகத் தூய்மை ஏற்பட்டால் பிறகு, இறையச்சம் உருவாகும். பிறகு, அடையாளங்கள் மேல் அடையாளங்கள் வெளிப்படுவதை உலகம் பார்க்கும். மேலும், இதுவே வெற்றிக்கான கூடுதல் வழிகள் திறக்கக் கூடிய இடமாகும். இன்ஷாஅல்லாஹ்

மேலும், இதுவே மாபெரும் வெற்றியின் உண்மைத்துவத்தை நாம் பார்க்கும் நிலையாகும். எனவே, முஹம்மதிய்ய மஸீஹின் அடிமைகளே! ஒவ்வொரு வெற்றியின் அடையாளமும் நம்முன் ஒரு புரட்சியை உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

எனவே, இன்றைய நாள நம்முன் ஓர் ஆன்மீகப் புரட்சியை உருவாக்கக்கூடிய நாளாக இருக்கும் என்றும், நமது பிள்ளைகளுக்கும் நமது சந்ததிகளுக்கும் கூட ஆன்மீகப் புரட்சியை உருவாக்கக் கூடிய நாளாக இருக்கும் என்றும் உறுதிமொழி எடுங்கள். மேலும் இருக்கவும் வேண்டும். இல்லை என்றால், டூயி உடைய அழிவினால் அல்லது இந்த நகர மக்கள் டூயி உடைய பெயரை அறியாமல் இருப்பதானால், இவர்கள் அறிந்திருக்கவில்லை: நாம் அவர்களுக்குத் தெரியப்படுத்தி விட்டோம் என்பதனால் நமக்கு என்ன பலன் ஏற்பட முடியும்?

இந்த மகத்தான வெற்றியின் முன்னறிவிப்பு நிறைவேறியதற்கான பலன் எப்போது கிடைக்கும் என்றால் இந்த மகத்தான வெற்றியின் முன்னறிவிப்பு நிறைவேறியதனால் நமக்குள்ளும் ஒரு புரட்சி உருவாக வேண்டும். ஒரு மாபெரும் புரட்சி உருவாக வேண்டும். நம் நாட்டவரும், உலகமும் ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்துவிட வேண்டும். இறைவனின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக எல்லாத் தியாகங்களையும் செய்ய ஆயத்தமாக வேண்டும்.

அல்லாஹ் நமக்கும், நம்முடைய சந்ததிகளுக்கும் இந்தத் தரத்தைப் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

பள்ளியைப் பற்றி இவர்கள் இந்த விபரங்களை எழுதியுள்ளார்கள். ஆனால், அதுவோ பின்னர் உங்களுக்குத் தெரிந்துவிடும். சிலவற்றை நான் கூறிவிட்டேன்.

தமிழாக்கம் : மவ்லவி. அதாவுல் முக்னீ

* * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad